ஞானப்பிரகாசசுவாமிகள்

அருளிச்செய்த

# செங்குந்தர்பிள்ளைத்தமிழ்.

## செங்குந்தரூசல்.

---

இவை,

சிதம்பரம்

அ. இரத்நசபாபதிமுதலியாரவர்கள்

விருப்பத்தின்படி.

---

ஸ்ரீ தணிகாசலபதியுபாசகராகிய

காஞ்சி-நாகலிங்கமுதலியாரால்

பரிசோதிக்கப்பட்டு,

சென்னை:

…யெலாஜிகல்யந்திரசாலையிற்

…ப்பிக்கப்பட்டன.

1891

25

O-,15MGP;S
M91
163066

உ

சிவமயம்.

முருகக்கடவுடுணை.

ஞானப்பிரகாசசுவாமிகள்

அருளிச்செய்த

# செங்குந்தர்பிள்ளைத்தமிழ்.

இஃது,

சிதம்பரம்

அ. இரத்தினசபாபதிமுதலியாரவர்கள்

விருப்பத்தின்படி

திருக்கயிலாயபரம்பரை உபசுப்பிரமணியர் மரபினராகிய

திருமயிலை

இலட்சுமணசுவாமிமுதலியாரவர்கள்

முன்னரச்சிட்டபிரதிக்கிணங்க

ஸ்ரீ தணிகாசலபதியுபாசகராகிய

காஞ்சி - நாகலிங்கமுதலியாரால்

பரிசோதிக்கப்பட்டு,

சென்னை:

இந்துதியலாஜிகல்யந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

இரண்டாம்பதிப்பு.

1891.

O-;15MGP,s
M91

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

# செங்குந்தர்சரித்திரச்சுருக்கம்.

சிவபெருமானது திருநேத்திரத்தி லெட்டுமிரண்டுஞ் சேர்ந்து பிரணவவுருவமாக வாறுசிரங்களும் பன்னிரு கரங்களுமாகித் திருவுருவங்கொண் டெழுந்தருளியிருக்கின்ற சிவசுப்பிரமணியக் கடவுளுக்கு ஆதியிலே கனிட்டோற்பத்தி செய்யும்படித் திருவுளங்கொண்ட சிவபெருமான் நான்கு வருணங்களில் உயர்வுற்ற முதன்மூன்று வருணத்தோரது தொழிற்பொருளடங்கிய கைக்கோளர் என்னும் பெயர்தந்து யாவரும் வியந்து புகழ வுற்பத்தி செய்யப்பட்ட இக்குலத்தினர் சண்முகக் கடவுளுடன் குந்தம்பிடித்துச் சென்று அசுரரது கூட்டங்களை யதஞ்செய்து செயித்தமையின் செங்குந்தர் என்னுமோர் பெயருங்கொண்டு ஐயப்படாமை விருப்பின்மை வெறுப்பின்மை மயக்கமின்மை பழியைநீக்கல் அழிந்தோரை நிறுத்தல் அறம் விளக்கல் பேரன்புடைமை என்னு மறத்துறுப் பெட்டினையுமனுசரித்துத் தேவபாடையாகிய வேதத்தை மறைத்தலுங் காத்தலும் ஓதலும் அதன்வழி நிற்றலும் அன்றி யாவர்க்கும் பயன்படன் முதலிய தொழிலுமுடைய வந்தணர்போலச் சிறந்த நூலாய்ந்தருளுந் தொழிலினை மேற்கொண்டு யாவர்க்கும் பயன்பட நிற்றலானும், காவலரைப்போல மிக்க வீரமுங் கைவேலுங்கொண்டு அடங்காதவர்களைச் சதுர்வித தந்திரங்களா லடக்கி வெற்றிகொள்ளலும் நாவலரைப்போல விலக்கண விலக்கிய கணித பூகோள ககோளாதி நூல்களை ஐயந்திரிபறக் கற்றுப்பயனறிந்து கற்றறியாமை காரணமாக வந்தடையுங்

காமம் வெகுளி மயக்கம் என்னு முக்குற்றங்களையு மேற்கொண்டு சக்கரத்தைச் சார்ந்து குக்கன் குரைத்தாற்போலுங் கற்றுணர்ந்தோரைக் காரணமின்றித் தூஷிப்பவரும் ஈழமுதலிய புன்னாட்டு வாசிகளுமாகிய புன்னாவலரது சுரைவித்துப்போலும் பற்களைநோக்கி ஐயோ வறிதே மானிடதேகப் பயனை விட்டுவிடுகின்றீர்கள் என்றிரக்கமோடு புத்திகூறியுங் கேளாராயின் தண்டித்தலானும், ஓதல் வேட்டல் பொருளீட்டல் ஈதல் பசுக்காத்தல் ஏருழல் என்னு மறுதொழில் புரியும் வைசியர் போல வவ்வறுதொழிலினையு மேற்கொண்டிருத்தலானும், பெருமையின் விளைவிற்கெல்லா நன்னிலமாயினோ ரிவர்களே யாதலின் இச்செங்குந்த மரபோரது பெருமைமுழுதும் எடுத்துப் புகழக் கலைமக டன்பாற்பட்ட கல்வித்திறனெலாஞ் செலுத்தினு முடியுமோவென்க. கைக்கோளர் என்னுமிப்பெயர் முதனிலைதிரிந்த தொழிற்பெய ரடியிற்பிறந்த கோளர் என்னும்பெயர்ப் பகுபதம் கையென்னும் பலபொரு ளொருபெயர்ச்சொல்லோடு இரண்டாம் வேற்றுமைத் தொகைநிலையாய் வைதிக நல்லொழுக்கத்தைக் கொண்டோரெனப் பொருள்பட்டுச் சந்தித்தவழி அந்தணர்க் கொப்பாகவும், படைவகுப்பைக் கொண்டோர் எனப் பொருள்பட்டுச் சந்தித்தவழி அரசர்க் கொப்பாகவும், ஏழாம்வேற்றுமைத்தொகைநிலைத் தொடராய்க் கையின்கணெழுந் தொழிற்பயனையே கொண்டோர் எனப் பொருள்பட்டுச் சொல்லெச்சப் புணர்ச்சியாய்ச் சந்தித்தவழி வைசியர்க் கொப்பாகவும் நிற்குமா றுணர்க. இதுநிற்க:—

முற்காலத்து வித்துவான்களுள் மிக்க புகழுடைய புகழேந்திப்புலவரும் புலிக்கொடியுடைய சோழமகாராசரும் பொன்னியாற்றங் கரையின் வடபுறமாகச் சாரிவரும்போது சில கைக்கோளர் சிப்பஞ்சிப்பமாகக் கட்டப்பட்ட நூன்மூட்டைகளையும் புத்தகமூட்டைகளையு மெடுத்துக்கொண்டு வெயர்வை

யொழுகச் செல்வதையுஞ் சிலவந்தணர்கள் தேகசுசியோடுண் டுடுத்துச் சந்தன புட்ப வலங்கிருதராய்க் களிப்புடன் செல்வ தையுங்கண்டு, ஓய் அம்மானே ! கல்வியா லிவ்வந்தணர் களிப் புடன் செல்வதையும் அஃதின்மையா லிக்கைக்கோளர் சலி ப்புடன் செல்வதையுங் காணும். என்ன உடனே புகழேந்திப் புலவர் இக்கைக்கோளரது கல்வியொழுக்கங்களை யரசனுக்குத் தெரிவிக்கவேண்டி வீட்டிற்குப்போய் அரசனுக்கு மிகவும் வறியவர் வேடம் போட்டுவித்துத் தானு மவ்வாறே புறப்ப ட்டு அக்கிராமத்திற்குள் அந்தணர் அரசர் வைசியர் என்னு மூன்று வருணத்தோர் வீட்டிற்குப்போய் உமதில்லிற் சாப்பா டுண்டாவென்ன, அதற்கு இல்லையென விடைகொடுத்தவருங் கொடாதவரும் பார்த்துச் சிரித்தவருங் கேலிசெய்தோருமாகக் கண்டு மிக்க கோபத்துடன் மற்றுமோர் வீட்டிற்குப்போய் அவ்வாறுவினவினன். அதற்குத்தரமாக (இறக்கச்செய்யும் பெ ருமை எமது கைக்குந்தத்திற்கே, நாடோறு மெம்வீட்டின்கண் மேலாகிய பெருமைப்பாடேற்ற வுண்டி பொலிந்து விளங்கும், நாவினாற் பெருமைகொண்டோய்! அதிகரிக்கும் வயிற்றுப்பசி தணிய இருந்து உண்டு உடுத்து நீ செல்லக்கடவாய்.) என் னும் பொருள்படச் சொன்ன—

“சாப்பாடுகுந்தக்குச்சந்ததமுமெம்மில்லின்
மீப்படாமுண்டிமிளிருங்கா—ணுப்பாடு
கொண்டோயிருந்துமிகுங்குக்கிப்பசியாற
வுண்டேகுகநீயுடுத்து”.

இக்கவிதைக்கு மகிழ்ந்து இருதகுள பாயசமுதலியவைக ளோ டுணவுண்டு தாம்பூலம் முதலியவைகளைக் கைக்கொண்டு மகிழ்ச்சியோடு (உம்மைப்போல் நூல்களை ஆராய்ந்திருக்கினும், சொல்லுகின்ற விம்மையில் எல்லோரிடத்தும் பொருந்திய

செய்கைப்பாட்டைச்செய்யினும், வேலுக்கு இடமாகப்பொருந்திய நமது கந்தச்சுவாமியாற் சிறைப்பட்ட கொய்யபிரமனைப் பணிதலொன்றே அந்தணரிடத்திற் குற்றம் என்பர்.) என்னும் பொருள்பட—

"தூலாய்ந்திடினு நுவலிம்மையெல்லோர்தம்
பாலேய்ந்தசெய்கைபடைக்கினும்—வேலேய்ந்த
நுங்கந்தனுற்பட்டகொய்பிரமனேற்றலொன்றே
பங்கமென்பர்பார்ப்பாரகத்து".

இச்செய்யுளைச் சொல்லிச் செலவுபெற்றுக்கொண்டு போனபோது இவரது சரித்திரத்தைப் புகழேந்திப்புலவர் சொல்லக் கேட்டுக்கொண்டுபோன சோழமகாராசன் மிகமகிழ்ந்து மற்றைய வருணத்தோரை மிகவிகழ்ந்து நகைக்கும்போது தோன்றிய விக்கல்தணிய அம்மானே சலந்தேடுமென்ன, புகழேந்திப் புலவர் அங்கிருந்த ஓர் வீட்டுத் தலைக்கடையிற் சென்று சலமுண்டாவென்ன, அவ்வமையத் தெதிர்ப்பட்ட அருணகிரி முதலியார் என்பவர் அதற்குத்தரமாக (எமது கைக்குந்தத்தின்கண் தணியாக் கோபமுண்டு, பொருந்திய எமதில்லின்கண் - யாவரும் உண்ணப் பிரயோசனப்படும் - பொருள்களும் நீர் உண்ணப் பாலும் உளவாதலின்; வெற்றியுற்ற பொருளைக் காட்டுவீரானல் - யாவரும் - புகழும் உமக்கு இப்போது சந்தோஷித்து அப்பொருள்களைக் காட்டுவேன் என்னும் பொருள் படச் சொன்ன—

"சலமுண்டுகுந்தத்திற்றங்குமெம்மில்லிற்
பலமுண்டுநீருந்தப்பாலும்—வலமாம்
பொருள்காட்டுவீரேல்புகழுமுமக்கிப்போ
தருகாட்டுவேனேயுகந்து."

இச்செய்யுளுக் குத்தரமாகப் புகழேந்திப்புலவர் (வேலைக் கையிற்கொண்ட வரசர்களும், * கோவினையாற்றுஞ் சொந்தத் தைக் கைக்கொண்ட கோவைசியர் தனவைசியர் பூவைசியர் என்னு மூன்றுவைசியர்களும், உங்களிடத்துத் தேவர்பகையா கிய அசுரரைக்கொன்று செயித்தலும் ஈகைக்குணமும்விடாது சேர்ந்திருத்தலினால் எவ்வழியில் உமக்கு இனியொப்பாவர்.) என்னும் பொருள்படச் சொன்ன—

"குந்தத்தைக்கைக்கொண்டகொற்றவருங்கோவாற்றுஞ்
சொந்தத்தைக்கைக்கொண்முத்தூணிகரு - மந்தவும்பர்
தெவ்வழித்தலீகையுஞ்சேர்ந்திருத்தலானுமக்கு
வெவ்வழியிலொப்பாரினி."

இக்கவிதையைக்கேட்டவர் மிகமகிழ்ந்து வேண்டுவன வெல்லாங் கொடுக்கப் பெற்றுக்கொண்டு புகழேந்திப்புலவர் புறப்பட்டுப்போய்ப் பிரம சத்திரிய வைசிய என்னு மூன்றுவ ருணத்தோரது செயல்களை மேற்கொண்ட விவர் பரமசிவத்தி னால் பொதுவாகக் கொடுக்கப்பட்ட கைக்கோளர் என்னும் பெயர்க்குத் தகுதியாக நடந்து வருகின்றனர், ஆதலின் - இவர் களுக்கு முதன்மூன்று வருணத்தோரும் ஒப்பாகார் என்னச் சோழமகாராசனு மிகமகிழ்ந்து இம்மரபோர்மேற் கிருபையே செலுத்தி இருந்தனன்.

---

* கோவாற்றுஞ் சொந்தத்தைக் கைக்கொண்முத் தூணிகர் என்ற சொற்றொடர்-பசுவாற் சொந்தசீவனஞ்செய்யும் தூணிகர் எனக்கோ வைசியர்க்கும், அரசனைப்போல நீதியோடு பொருளுக்குமுயலுந் தூணி கர் எனத் தனவைசியர்க்கும், பூமியிற் பயிர்செய்யுந்தூணிகர் எனப்பூ வைசியர்க்கும் ஒத்துப் பொருடரல்காண்க. ஈண்டு தூணிகர்-என்பது வைசியர்க்கு ஒருபொரு ளொருசொல்லாய் வந்ததென்க.

இஃது,

காஞ்சிபுரம் - முத்தமிழ்ச்சூரி

**வீரபத்திரமுதலியாரவர்கள் செய்தது.**

சிவமயம்.

முருகக்கடவுடுணை.

# சாத்துகவிகள்.

சென்னைத்துரைத்தனவித்தியாசாலையில்தமிழ்த்
தலைமைப்புலமைநடாத்திய இயற்றமிழாசிரியர் திருத்தணிகை
## விசாகப்பெருமாளையரவர்களியற்றியது.

ஆசிரியவிருத்தம்.

சீர்கொண்டசெங்கதிராயிரகரங்களாற் செழுமறைமுறுக்க விழ்த்துத், தேனைச்சிலீமுகந்தமக்குமீந்திடுகின்றதிறமதுதானென்னவே,— நார்கொண்டஞானப்பிரகாசனெனுநாவலனன்றுசெங்குந்தமரபார், நயந்தோதிடப்பிளைத்தமிழினையுரைத்தனனந்நாளிலிந்நாளினற்,—பேர்கொண்டமயிலைத்தியாகராயக்குரிசில்பெட்புறுதவத்தில்வந்தோன், பேசுறுமசுரர்குலகாலனுமுருகவேள்பிஞ்ஞகனுதற்கண்வந்தோன், — நேர்கொண்டவருள்பெறுஞ்செங்குந்தர்மரபெனுநிலத்தவதரித்தவழகன், * நிறிலக்குமணசாமிமுதலியாரச்சினினிகழ்த்துவித்தனனதனையே.

மகாவித்வஜ்ஜனசேகராராகிய திரிசிரபுரம்
## வி. கோவிந்தபிள்ளையவர்களியற்றியது.

கட்டளைக்கலித்துறை.

செங்குந்தர்பிள்ளைத்தமிழ்த்யாகராயசிரோரத்தினந்
தங்குந்தனிமயிலைப்பதிவாழ்வுதழைத்துநின்று
பொங்குந்தவலட்சுமணசுவாமிப்புனிதன்புகன்
றெங்குந்தழைக்கவெழுதாவெழுத்திலிசைத்தனனே.

---

* ஈறுவிகாரத்தாற் றொகுக்கப்பட்டது.

### பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பாருலவுதிருமயிலையூரிலுறைசெங்குந்தர்பாரகுலதிலகதீரன், பண்புறுதியாகராயக்குரிசில்செய்தவப் பாக்யசுதனேக்குசுகுணன், — காருலவுகையனுணைமெய்யனுறுதுய்யன்களங்கமில்லாதசந்த்ரன், கன்னியர்களுன்னவொளிர்செவ்வியனடங்காதகருதலணைவென்றதிறலோ, — னேருலவுநீபமலர்மார்பனிருகட்கமலவிருநிதிக்கிழவனுரவோ, னிலட்சுமிவிலாசனதிலட்சணவுலாசனனிலட்சுமணசாமிமகிபன், — சீருலவுசெங்குந்தர்பிள்ளைத்தமிழ்ப்பனுவறெள்ளிதினுணர்ந்துகொள்ளச், செவ்வைதிகழச்சிலாராய்வித்தொழுங்கிற்றிருந்தப்பதித்தனனரோ.

---

சென்னை கவரன்மெண்நோர்மல் கல்விச்சாலையில் தமிழ்த்

தலைமைப் புலமை நடாத்தும்

## கோ.இராசகோபாலபிள்ளையவர்களியற்றியது

---

### பன்னிருசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

அங்குந்தரணிமிசையுமுரணுற்றுந்திறல்வாளவுணர்குழு, வாகும்பெருங்காரிருட்படலமடையவாரிவாய்மடுத்து,— நுங்குந்தரணிதனையனையநுனைவேற்படைகைக்கொளுமண்ணல், நோன்மைசான்றதுணைவனெனநவலொன்பதின்மர்மரபினராஞ்,— செங்குந்தரணிசீர்த்திநனிதெரிக்கும்பிள்ளைக்கவிதைதமிழ்ச், செந்நாவலர்கோன்கோவிந்தச் செய்யோன்றன்னூல்வழூஉக்களைந்த, — சங்குந்தரணியலார்முத்தந்தயங்கும்பழனமயிலைவரு, தனதனிலக்குமணக்குரிசிறகுமச்சியற்றுவித்தனனே.

---

மஹாவித்வான் செய்யூர்

## செ - சந்தியப்பமுதலியாரவர்களியற்றியது.

---

ஆசிரியவிருத்தம்.

ஆதிதனிற்சிவபெருமான்புதல்வர்சேனைக்கதிபர்நங்கணவவீரர்மரபாஒன்றுஞ், சாதியர்செங்குந்தஒன்பதற்குச்சான்றுசகலசிவத்தலங்கடொறுமிவர்கள்சென்று, கோதிலச்சேனைத்தலைவர்வேடம்பூண்டுகுமரவேளுடன்கூடியின்றகாறும், பூதலத்திற் சூரனைச்சம்மாரஞ்செய்யும் புகழ்பெற்ற வுற்சவமேபோதுமாதோ.

கதிரவனைக்கண்ணுடியான்மறைப்பனென்பதொருகதையைப்போலப், புதியதொருநூல்செய்துகைக்கோளர்புகழையெல்லாம்பூண்டுகொண்ட, மதியிலாதவர்கண்மனம்வாடிவெரூஉக்கொண்டோடமயிலையென்னும், பதியிலக்குமணக்கோன்செங்குந்தர்பிள்ளைத்தமிழையச்சிற்பதிப்பித்தானே.

---

## திரு-காழுசெட்டியாரவர்களியற்றியது.

---

நிலைமண்டிலவாசிரியப்பா.

ஒருவிடையடுத்துமிருவிடையாகியு
முக்கடவுளரினொக்கவேய்ந்து
மகடூஉ.வாகியுமலர்விழிசாத்தியு
மின்னணம்பற்பலவியைந்துமெய்த்த
திசைமுகற்பயந்தோன்றிகைமுகங்கொளாவொண்
மானமிரக்கம்பொறையிலர்தேறவோ
வீனநாற்காலேனமேயாகியுந்
தன்கழற்காணாத்தாணுவாய்நிமிரொழிற்
றற்பரவைம்முகற்றணவாப்பணையின்

பாதச்சிலம்பினுதரம்பெறவுதித்
தறுமுகற்கெழுதுணையாயெண்ணருஉ
மொன்பான்றிறனமர்தொண்டியல்பத்தரா
யிறைவனூர்முதலாவுறையொளிர்சங்கமும்
பதினோருருத்திரர்பன்னிருவருக்கனைப்
போதயாவும்படைபோதனெனப்புகழ்
தெய்வப்புலமைத்திருவள்ளுவர்துதி
யௌவைநிரந்தரஞ்சான்றோருடைத்தெனப்
பதின்மூன்றுதமிழார்பதிநயந்தோங்க
* வீழமுதலொழிநிலம்வியந்தேங்க
நவிறெண்ணீர்வயற்றொண்டைநன்னாட்டிற்
றிலகமுறழ்ந்துகப்பலகில்காஞ்சிவாழ்
செங்குந்தர்மிசைஇப்பொங்கஞ்சிவணாப்
புற்றிடத்துறையராக்கடுத்தவன்சொற்
போலிநாவலர்தூற்றிடப்புறந்தமிழ்
வேலி † நாவலர்போற்றிடப் ‡ புத்தகக்
கூலிநாவலர்குலவிளக்கிணையுயர்வில
னிராமலிங்கற்பிணங்குவார்கோளரி
யிராமலிங்கற்பிரியாதேத்துமெய்ஞ்
ஞானப்ரகாசன்வானணநுவன்ற
வள்ளைத்தமிழ்சேர்பிள்ளைத்தமிழையோ
ரச்சிற்பதிப்பித்திச்சகம்பரப்பினன்

---

* ஈழம் எ - து - சிங்களதேசம்.

† நாவலர், பாடுநர், கவிஞர், பாவலர், புலவர், அறிஞர் இவைமுதலிய ஒருபொருட்கிளவிகள்.

‡ புத்தகமென்றது-தியானமென்னும் புதியபுனலாற்றிருக்குறுமழுக்காறவாவொடு வெகுளிசெற்றமாகிய வழுக்கைக் கழுவப்பட்ட மனத்தை.

பதத்தோர்விரலின்மிதித்தராவணற்றெற
வானவர்வானரமாக்கோலியும்வேண்
டிராமற்கருளியபராபரச்சிவன்றாட்
சிந்தையோன்மயிலைத்தியாகராயன்
செல்வச்செம்மலாய்ச்செங்குந்தர்குலத்தோ
ரிலக்கமாவுறீஇயவிலக்குமணசாமியே.

---

திருத்தணிகை விசாகப்பெருமாளையரவர்கள் மாணாக்கரும்
இலண்டன்மிஷன் கல்விச்சாலையில் இயற்றமிழ்
பிரதம பண்டிதருமாகிய பாக்கம்

## திருஞானசம்பந்தமுதலியாரவர்களியற்றியது.

---

### நேரிசையாசிரியப்பா.

சீர்திகழ்திங்கடிமிலுறுதரங்கப்
பேர்மிகுகங்கைப்புனலுறுசெஞ்சடைக்
கோவிடமமர்ந்தகொடியருண்மதலை
பாவலருடுக்களிற்பைங்கதிர்மதியெனும்
பொய்யாமொழிக்குப்பொருளுரைத்திட்ட
கையீராறுடைக்கடம்பனெடிகலராய்ப்
பேருரங்கொண்டுபோரினினிமிர்ந்த
சூருரப்பொருப்புகடுணிபடச்செங்குந்
தம்பிடியொன்பான்றம்பியர்ச்சார்ந்தே
செம்மயிற்பெருமாடம்மைநசைஇ
யருண்மிகநாளுமடைந்தெக்குலத்தினுந்
தெருளொடுஞ்சிறந்துசீர்த்தித்துசநிறீஇ
வாழ்செங்குந்தர்மரபிற்சிறந்ததொன்
றூழ்கடலுலகிலரிதெனத்தேர்ந்துட

னருளொடுநின்றேயம்மரபோர்மேற்
பொருளுறவெடுத்துப்பொற்புறுபிள்ளைத்
தமிழினைவியந்தவர்தங்குடிமரபா
மமிழ்தெனமுன்னுணர்ந்தருந்தமிழ்நாட்டிற்
கற்பனவுணர்ந்துகருதியவவ்வழி
நிற்பவராகவுநினைதொறுநினைதொறூஉ
மிதனிற்சீரியதிலையெனநோக்கினே
ரதனிற்சிறந்தவரும்பொருள்வழியுற
மும்மலந்தன்னைமுனைந்தவவ்வாற்றினுற்
கம்மலர்திருத்தக்காட்சியேகாட்சியாக்
கண்டவனடியனாயண்டியேமகிழ்ந்து
பண்டையஞானப்பாவையிலிழிவித்
தாடச்செய்தோனருளினையென்றுங்
கூடியிருக்கக்குறிப்பினையுணர்த்தினேன்
ஞானப்பிரகாசநற்சுவாமிகளெனு
மாநற்பெயரோனறைந்தனனந்நாட்
டிருமயிலாபுரிச்சேர்ப்பதிக்கபாலிபா
லொருமையினெழுந்தவுள்ளத்தினனாய்
நாடொறுஞ்சென்றுநயந்தின்புருகி
வாடுருவண்ணம் வணங்குபுநின்று
தயாமிகவாழ்த்தித்தண்ணளியடைந்த
தியாஅகராயமுதலியார்தினனுஞ்
செய்தவப்பயனேதிரண்டுருவாகி
வையமீதினில்வந்ததென்றெண்ணவு
முட்டாட்டாமனமுனிந்திவன்முகத்தை
விட்டாவிடனிலைவிமலையென்றெண்ணவு
மிரப்போரெனுமளியினமிவன்கரமே
தரப்போதும்மெனத்தம்மனத்தெண்ணவுஞ்

சாந்தநன்ஞானிகடாம்பயின்றலாவப்
போந்தவனிவனருட்பொதிகையானெனநற்
குணமொடுபிறந்திலக்குமணச்சாமி
யெனுநற்பெயர்கொண்டிருந்தநல்வள்ளல்
பாற்கடலமுதினைப்பயிலுங்கிருட்டியின்
சேற்சலசரக்கட்செழுபிணைக்குட்டியை
மணந்தசெவ்வேளுமனத்தினிலுன்னு
குணங்கெழுமன்பன்கோதறுகுணத்தன்
றம்மரபினிற்குறுமம்மையெல்லாஞ்சொல்
செம்மைநூலேயெனத்தேடமையத்து
மின்னுற்பாதமென்னத்தோன்றி
மன்னுறவித்தமிழ்தன்னைக்கண்டே
னேட்டுப்பிரதிகளிற்கைப்பிழைகளை
யோட்டிச்சுத்தமோடொளிபெறத்திருத்துவித்
தாவருஞ்சிறந்தவச்சியிற்
றேவருநயக்கச்செய்திட்டனனே.

---

சேங்குந்தப்படையோன்றிருவடிவாழ்க.

வேலுமயிலுந்துணை.

உ

சிவமயம்.

முருகக்கடவுடுணை.

# செங்குந்தர்பிள்ளைத்தமிழ்.

---

## காப்பு.

மன்னு திருக்காஞ்சிநகர்வாழுஞ்செங்குந்தர்மிசைப்
பன்னும்பிள்ளைத்தமிழைப்பாடவே — மின்னிற் [குங்
குழலிமைந்தன் *புழைநெடுங்கைக்குஞ்சரச்செம்பொன்னவிர்க்
* கழலிலென் றன்சென்னிவைப்பன்காண்.

---

## காப்புப்பருவம்.

### திருமால்.

சீர்மேவுதெண்டிரைப்பாலாழிமீ தினிற்சேடசயனத்தின்
மிசையே, செங்கண்டுயின் றுபதினாலுலோகத்தையுஞ்சீர்பெற
வளர்க்குமுகிலைத்,— தார்மேவுபச்சைப்பசுந்துழாய்மாலைபுனைச
ங்கேந்துசெங்கையரசைச், †சததளக்கோவிலுறைதிருமலைக்கிரி

---

* இவ்விரண்டிடத்தும் காய்முன்னிரைவந்து கலித்தளை யாகலாற் பாவிற்சிதைந்த தினத்துளடங்குமென்பதனாலே வேற்றெருவி வெண்டுறையெனல் வேண்டும்.

காப்புப்பருவம் - பாட்டுடைத்தலைவரைத் திருமால்முதலியோராற் காவல்புரிவிக்கும் பருவம்.

† சததளக்கோவிலுறை என்பதற்குக் குளங்களிலே தாமரைமலர்கள் பூத்திருக்கிற திருமலையாகிய திருவேங்கடமலையில் வளர்கிறவென்று பொருள்கொள்ளவேண்டும்.

யில்வளர்சக்கிரமாலைத்துதிப்பாங், — தேர்மேவுதிருவீதியேகம்பர்கச்சியுறைதேவிகாமாட்சியுமையாள், செய்யசெந்தாமரைப்பாதச்சிலம்பில்வருதீரவீரியர்கடம்மைக், — கார்மேவுகைத்தலவசந்தத்தியாகரைக்கந்தவேளின்* றுணைவரைக், கனமானசெங்ந்தமுதலிமாரைத்தினங்காத்துரட்சித்தருளவே. (க)

## நடராஜர்.

வடிகொண்டவெண்சுதையணிந்தகோபுரசிகரமாடமாளிகைசிறந்த,வளமருவுதில்லைச்சிதம்பரமகாதேவவள்ளலைத்தெள்ளுநறவக் — கடிகொண்டகொன்றையந்தார்முடிப்பரமனைக்கமலமலரடிசிவப்பக்,கனகசபைநடனமிடுசிவகாமிநன்பனைக்கண்குளிரநின்றுதொழுவா, — மடிகொண்டசெந்தமிழ்க்கவிஞர்கள்சகாயனையடைந்தோரையிகழாமலே,யன்னதானஞ்சொர்னதானநல்கும்பெரியவருள்தங்குசிந்தையோரைத் — துடிகொண்டபுகழ்மருவுசெங்குந்தவீரரைச்சுரிகைநாராயணர்தமைத், தோகைமயிலேறிநடமாடிவருகந்தவேள்துணைவரைக்காக்கவென்றே.()

## அண்ணாமலைநாதர்.

மிக்கநறவக்கொன்றைதும்பைகூவிளமறுகுவிரிபுனற்குழவிமதியம், மேவுகோடீரப்பராபரனையிறையவனைவேளைவென்றிடுகண்ணனைத், — தக்கதவமிக்கவுண்ணாமுலைத்திருமருவுசங்கரனையண்ணாமலைச், சம்புவினடிக்கமலநம்பிநம்பித்தினந் தாழ்வுகொடுமுடியில்வைப்பா, — முக்கிரமிகுவரதுங்கவல்லானைவென்றவரையுண்மைநெறிவண்மைமாறு,வுள்ளம்படைத்தவரையெள்ளாமல்வள்ளலடியோதித்துதிக்குமவரை, — யிக்கனையமொழிமாதர்மதனர்செங்குந்தர்தலைமையிலகுமென்மீசையுடைய, வெழில்கொண்டசெஞ்சயனைவீரநாராயணரையீண்டுரட்சித்தருளவே.()

---

* துணைவர் - சகோதரர்.

## தியாகராஜர்.

ஐம்புலப்பற்றெழித்துட்கரணவாதனை யடக்கிக்கடக்கவரிதா, மந்தரசுழுத்திதுரியாதீதவெளியிலே யானந்தகித்திரைசெயுந், — தம்பமிகுமறிவுடையரிதையநீள்செய்யசெந்தாமரைக்கோயில்புக்க, தையல்கமலாலயத்தேவியாரூரிற்றனிக்கடவுளைப்பணிகுவாம், —வெம்புபகையாகவருசூரசங்காரஞ்செய்வெற்றிசேர்செங்குந்தரை, மேவுமிகுவிருதுடையவீராதிவீரியரைவேளனையவடிவாளரை, — நம்பினர்கள்தம்பமெனநின்றருள்தியாகரைநரேந்திரர்மதிக்கவந்த, நாடறியவேவிலங்கினுநாவிலங்காதநல்லோர்களைக்காக்கவே. (ச)

## சொக்கநாதர்.

திரைமருவுகடலுலகமெல்லாமதிக்கவேசேணமரர்கொண்டாடவே, செய்யசெந்தாமரைப்பாதஞ்சிவந்திடத் தித்திமித்திமிதியெனவே, — வரைமருவுகுமரிகவுமாரிமீனுட்சிமாமாதங்கிபங்கினுடனே, மாமதுரையறுபத்துநாலுதிருவிளையாடல்மகிழ்சொக்கரைப்பணிகுவா, — முரைமருவுசெந்தமிழிலக்கியவிலக்கணமுணர்ந்துகரைகண்டோர்களை, யோடியாடும்புரவிநகுலப்பிரதாபரையுத்தமக்குணசுத்தரை, —விரைமருவுசெங்கடப்பணியும்புயாசலரைவெல்சமயமுதலியர்தமை, மிக்கானசெங்குந்தவீரநாராயணரைவேண்டிரட்சித்தருளவே. (ரு)

## திருவேகம்பநாதர்.

முத்திக்குவித்தைச்செழுங்கருணைவள்ளலைமுழங்கு * சங்கேந்துகுரவன், முன்னமொருகாலத்தறிந்திடாகினறதோர்முதல்வனைக்கரகுலனைப், — பத்திக்குவித்தானகாமாட்சியம்மையுமைபாகமகலாதிருக்கும்,பரமனேகம்பநாதன்றனதுவிரைமலர்ப்பாதநாமஞ்சலிப்பாங்,— தத்திக்குலாவுமயில்வாகனக்குமரவேள்

* சங்கேந்துகுரவன் - விஷ்ணு.

தம்பிலட்சத்தொன்பதைத், தாமரைக்கண்ணனைத்தாமரைப்போ தனைத்தாமரைத்தாளாளரோ,—டெத்திக்குளுண்டானபாலர் முனிவோர்தம்மையிரவுபகலுந்துதிக்கு,மினியபுகழ்சேர்கின்றசெங்குந்த * முதலியர்களெல்லோரையுங்காக்கவே. (சு)

## காமாட்சியம்மையார்.

ஆரணநான்முகன்மாலவனிச்சைக்கோர் வேட்கையைத்தருவாட்கைய,ளாதிமகேசுரர்பாதபதுமத்தினோர்க்ககமெய்க்கவருள்தேக்குவாள், — காரணகாரியநாதர்பக்கத்திற்சேர் காட்சியைத்தருசூட்சியாள்,காவெனுமாவடிமாதவக்கச்சிகாமாட்சியைத்தொழுதேத்துவாம்,— பூரணமாமுலைமாதரிச்சிக்கவேபூட்டுமொல்விளையாட்டினோர், போதகமாகியஞானவுற்பத்திக்கோர்போக்குசிதமெய்வாக்கினோர், — தாரணிதீபமொய்மார்பர்சுத்தத்தோர் தாற்குநல்லறமீக்கொள்வோர், தாருகாசுரனைவன்மார்பிடைக்குத்திப்போர்தாக்குவீரர்க்காக்கவே. (எ)

## விநாயகக்கடவுள்.

பூமேவுநறவம்புனைந்தகோடீரப் புராந்தகன்றருபாலனைப், † பொன்னனைப்பொன்னவள்முராரிதிருமருகனைப்புங்கவண்கங்கைமகனைக், — காமேவுசேணுடர்தொழுதெய்வமும்மதக் கரி

---

* முதலியர் - முதல்வர், ஆதியாயுள்ளவர்-இதனை "இந்திரனயன்மாற்றேவர்யாவர்க்குமுதன்மையாக - வந்தபான்மையினாற்சூலமழுப்படையத்தனார்க்கு - முந்தியநாமந்தானுமுதலியராகையாற்செங் - குந்தசந்ததிக்குமப்பேர்முதலியவொன்றுகூறும்." என்னுந் திருவிருத்தத்தானுமுணர்க. இது இக்காலத்து முதலியாரெனமரீஇற்று.

† பொன்னிறமாக அரும்புதலையுடைய கமலாலயப் பொன்னனவளுக்கும் முராரிக்கும் மருகனென்க.

முகனைமறைறமுழங்குங், கச்சியம்பதி * விகடசக்கரவிநாயகன் கமலபாதந் துதிப்பாம், — மாமேவுபுனிதத்திருக்கம்பையாற்றினில் வருந்தித்தவஞ்செய்கையால், வந்தருளியேகம்பர்பாகங் கொடுக்கின்றவல்லியபிராமிகுமரி, — தேமேவுபாலுடையகாமாட்சிபாதத்திருச்சிலம்பதிலுதிக்குஞ், செங்குந்தர்பிள்ளைத்தமிழ்க்கவிதழைக்கத்தினந்தினங்காத்தருளவே. (௮)

## முருகக்கடவுள்.

செஞ்சடைப்பரமனுக்கருள்ஞானமருள்செயுஞ்சிவஞானகுருநாதனைச், சேவற்பதாகைச்செழுங்கருணைவள்ளலைத் தெய்வயானைக்கரசனை, — யஞ்சுகக்குறவள்ளியம்மைமணவாளனையடுத்தசுரைவென்றகுகனை, யாதிவேதாவையுஞ்சிறைகொண்டசரவணத்தறுமுகனையஞ்சலிப்பாம், — பஞ்சவண்ணவிருதுபுலிக்கொடிமலாரியும்பார்புகழவேபடைத்த, பாக்கியசம்பன்னரைத்தேக்குதிறல்வீரரைப்பரமங்கையவள்பங்கனுங், — கஞ்சமலர்வேதனுங்கண்ணன்விண்ணுடருங்கண்டுகொண்டாடவந்த, கச்சியம்பதியில்வருவீரசெங்குந்தரைக்காத்துரட்சித்தருளவே. (௯)

## முப்பத்துமுக்கோடிதேவர்.

தாரணிமதிக்கவேமுப்பத்திரண்டறஞ்சகலவுயிருந்தழைக்கச், சங்கரனளந்துதருமிருநாழிநெற்கொண்டு தவிராமலேவள

---

* பசுவைப்பாலைக் கறந்தானென்பது பசுவினது பாலையெனத்திரிக்கப்படுவதுபோல விகடசக்கரவிநாயகன் கமலபாதமென்றவிடத்துத் தொகுத்த ஐயுருபை ஆறனுருபாக்குக. விடுவசேனர் விண்டுமூர்த்தியின் பொருட்டு அவரிழந்த சுதரிசனமெனப்படுந் திருவாழியை விகடக்கூத்தாடி விநாயகமூர்த்தியிடம் பெற்றனரெனக் காஞ்சிப்புராணத்துக் கூறப்பட்டது. அது வருமாறு: — "எக்கறவானவனியற்றும்விகடநெடும்போதெம்பெருமானேக்கி - மாக்கருணைசுரந்தருளியாழியவன்றனக்களித்தான்வரத்தான்மிக்கீர் - போக்கருமிக்காரணத்தாலன்றுமுதற்காஞ்சினப்புழைக்கத்தேவை-யூக்கமுறுந்திறல்விகடசக்கரவிநாயகனென்றுலகங்கூறும்."

ர்த்த, — சீரணிபயோதரிகவுமாரிமகமாயிதேவிபாதச்சிலம்பிற்,
செம்மையுடனேவந்து † பூமிதனையாளுமோர்செங்குந்தரைப்
புரக்க, — காரனையதிருமேனிமாயாவிநோதனுங்கஞ்சாசனக்கட
வுளுங், கரிமுகக்கணபதியுமுருகநற்றேவனுங்கன்னிமாரோரெ
ழுவரும், — மூரல்விரிசெய்யசெவ்வாய்க்கலைமடந்தையுமுளரி
யாலயமங்கையும், மோதுமலர்சூழ்கற்பகாடவியில்முப்பத்துமு
க்கோடிதேவர்களுமே. (க0)

காப்புப்பருவமுற்றியது.

## செங்கீரைப்பருவம்.

புக்கமிகுதருமனதிகெஞ்சியோடத்தங்கு புனிதைச்சினம்
பிறக்கப், பூவுழக்கியவண்டுகாணுதுங்கிடநின்ற புள்ளினந்தள்
ளியோடச், — சங்கினஞ்சூழ்பழனமள்ளர்தள்ளாடத்தயங்கிடை
க்கடைசியர்குழாங், — தங்கள்செங்கைநெறித்தென்செய்வோ
மென்னத்தனித்தனிகடாக்கள்வெருள, — வங்கணவர்தங்களிட
வாலைவாயுட்புகுதவம்புயங்கொய்யுமின்னு, ரஞ்சியோடக்கமல
மிஞ்சியோடக்கங்கையனையகம்பாநதியினில், — செங்கயல்களு

† முசுகுந்தனுடன் வீரவாகுதேவர் பூமிதனையாண்டனரென்
பதும், அவருடையகுமாரராகிய அனகராஜன்முதலியோர் கா
ஞ்சிமுதலிய திருப்பதிகளில் அரசுரிமை நடாத்திவந்தனரென்
பதும் கந்தபுராணவரலாறு. இதுபற்றியே பூமிதனையாளுமோர்
என்றார்.

செங்கீரைப்பருவம் - செவ்விய மதலைச்சொற்களைப் பே
சும்பருவம். கீர் - சொல். இப்பருவத்தின்செயல் ஒருகாலைமட
க்கி ஒருகாலைநீட்டி இருகைகளையும் நிலத்திலூன்றித்
தலைநிமிர்த்து முகமசைய ஆடுதல்.

கள்கச்சிமங்கையுமைவரபுத்திரர்செங்கினை * யாடியருளே, சேவலங்கொடியாளர்மேவிடுந்தயவாளர்செங்கீரையாடியருளே. ()

† இந்திரன்முதற்றேவர்யாவருங்கயிலைமலையிறைவன்முன்னின்றுசூர, னிகலிற்படும்பாடனைத்தையுமொழிந்திடநம்மீசனுருளமிரங்கித், —தந்திடுநுதற்கண்ணினழலெழுப்புஞ்சுடர்தனைக்கண்டுபோர்வதியுளந், தனிலஞ்சியோடவவள்பாதச்சிலம்பிணைகள் தாக்கநவமணிகள்சிதறப், — பைந்தொடிமடந்தையர்க ‡ ளொன்பதின்மராகியேபரமனைக்கண்டவுடனே, பரிவுகொடுகெர்ப்பமாய்வீரவாகுவினுடன்பண்பாகவந்துதோன்றிச், —செந்திருவிளங்கவேவந்தலட்சம்வீரர்செங்கீரையாடியருளே, சேவலங்கொடியாளர்மேவிடுந்தயவாளர்செங்கீரையாடியருளே. ()

பாரமாகியநெடுங்கிரவுஞ்சகிரியிலேபயில்தாருகா ○ சூரனைப், பங்கப்படுத்தியவனைச்சயங்கொண்டபின்பார்தொழுமயேந்திரபுரியில், — கோரமாகியவேமகூடத்தினிற் சென்றுகுழுவி

---

* பன்மையிலொருமை தழுவினவழுவமைதி என்பதேயன்றித்தனித்தனி ஒவ்வொருவரையும் ஆடியருளெனச்சொன்னதாகக் கொள்ளவேண்டும். இனி வருமவைகளும் பிறவும் அவ்வாறே அமைத்துக்கொள்க.

† இதனை "இமையவர்யாரும்வேண்டத் - தன்பெருநுதற்கட்டீயாற்சரவணபவனைத்தந்தான். அந்தமில்விளையாட்டுள்ளவறுமுகக்கடவுடன்னைத் - தந்திடுமெல்லையன்னேன்றுனையந்தலைவராக - முந்தியவிறல்சேர்மொய்ம்பன்முதலியவிலக்கத்தொன்பா-னந்திதன்கணத்திறைநங்கைபாலுதிப்பச்செய்தான்" எனவரும் கந்தபுராணத்தானு முணர்க.

‡ ஒன்பதின்மராவார்-மாணிக்கவல்லி, தரளவல்லி, புருடராகவல்லி, கோமேதகவல்லி, வயிடூரியவல்லி, வயிரவல்லி, மரகதவல்லி, பவளவல்லி, நீலமணிவல்லி என்போர்.

○ நீட்டல் விகாரம்.

னொடுபோதவீரன், கொக்கரித்தங்கணசையாதகம்பந்தனைக்கொட்டமிட்டுப்பிடுங்கி,— யாரவாரத்துடன்மீளவந்தக்கணத்தடர்பூதபடைகூட்டியே, யறுமுகக்கடவுள்முன்னேறுமவர்சேனைகளடங்கலுமடங்கவென்றே,— தீரனாகியசூரசங்காரவீரியர்கள்செங்கீரையாடியருளே, சேவலங்கொடியாளர்மேவிடுந்தயவாளர்செங்கீரையாடியருளே. (௫)

முழுமதித்திருமுகக்கலைவாணிகேள்வனுமுராரிநெடுமாமாயனு, முட்டவெட்டுத்திக்கிலுண்டானபாலரொடுமுனிவோர்களோரொழுவரும், — பழுதிலாதித்தர்பன்னிருவருஞ்சோமனும்பகர்கருடகாந்தருவரும், பங்கயமுதற்றெய்வமங்கையர்களனைவரும்பன்னுகன்னியரொழுவருந், — தொழுதகைமாறுசூரனுக்கிவ்வகைத்தொழில்புரிந்தறமெலிந்தே, துக்கப்பெருங்கடலில்மூழ்கிவெகுகாலஞ்சுழன்றுழன்றயர்வோருடன்,— செழுந்தருவினீழல்வாழ் * தேவர்சிறைமீட்டோர்கள்செங்கீரையாடியருளே, சேவலங்கொடியாளர்மேவிடுந்தயவாளர்செங்கீரையாடியருளே. (௬)

வீறானசெல்வமுங்கல்வியுங்கேள்வியு மிக்கபொறையுந்தருமமும், விதரணிகவாண்மையும்பெருமையுஞ்சீலமும்மேவலரைமிகவெல்வதும், — பேறானகாரியஞ்செய்வதும்மாதவப்பெரியோரைநேசிப்பதும், பேருலகினாலுகவிவாணர்புகழ்கொள்வதும்பிரியாதமனவலிமையும், — † பாறுசவேல்தொட்டமுருகனைப்பரமனைப்பங்கயன்முதற்றேவரைப், பல்காலும்வலம்வந்துதிரி

---

* இதனை "குறையினைக்கடவுளர்கூறக்கேட்டவர் - துறையினை நிறுவியேசூர்தடிந்தான் - மறையினைவழுவறவளர்த்துத் தேவர்கள் - சிறையினைமீட்டதுதிருச்செங்குந்தமே" என்னு மேலோர் திருவாக்கானுமுணர்க.

† பாறு - ஆச - ஓடுகிறவேகத்தையுடைய.

வதும்பணிவதும்பல்லுயிர்க்கிதமுறுவதுஞ், — சீரானகருணையு
ம்பெற்றுமிக்கானவர்கள்செங்கீரையாடியருளே, சேவலங்கொடி
யாளர்மேவிடுந்தயவாளர்செங்கீரையாடியருளே. (௫)

## வேறு.

கந்தரமேடையிலுந்தலுமாமயில்கண்டேநின்றாடுங், கஞ்ச
முலாவியநீள்வயல்மேவுகரும்பொடிரும்பானல், — கொந்தலர்
வாழையுமாவொடுபாகல்கொளுங்கனியின்றேறல், கொண்டுமல
ர்த்திரிவண்டுகள்பாடிக்கொம்பாருஞ்சோலை, —யந்தரமேவியவு
ம்பர்களூர்புகவண்டர்கள்கொண்டாட, வம்புயமேலனநின்றுகு
லாவியசைந்தாடுஞ்சீரார், — செந்திருமேவியதொண்டைநன்
னாடர்கள்செங்கோசெங்கீரை, சேவகவேலவனார்துணையானவர்
செங்கோசெங்கீரை. (௬)

உச்சிதநாவலரிச்சைகொள்நீள்பொருளிந்தாவென்றேதா,
னொப்பொடுநீடியகைத்தலமேன்மையொண்காவின்சீரா, — ரச்
சமில்மேவலர்கைச்சிலைவாளொடுமங்கைதிண்டாட, வக்கணமே
பொருமிக்கவல்லாண்மையரன்பார்நண்பாளர், — வச்சிரமாமணி
யுச்சிததோளினர்வம்பாரும்போதார், மைக்கண்மின்னார்தொழு
மிக்கவில்வேளெனவந்தோரந்தாதார், — செச்சைகள்மேவியக
ச்சிவரோதயர்செங்கோசெங்கீரை, சேவகவேலவனார்துணையா
னவர்செங்கோசெங்கீரை. (௭)

அயிலைப்பொருவிழிமயிலொப்பனையவரன்பாமின்பூற, ல
தனைப்பருகியமதனொப்பெனவருமஞ்சாவெஞ்சூர, — ரெயில்மு
ப்புரமெரிநகையற்கினியவனொன்றேகொண்டாட, வெழில்பெற்
றிடுபலதிறமைத்தயிரியரஞ்சாநெஞ்சாளர், — பயில்வித்தைகள்
பலமுயல்வித்தகர்மலர்பண்பாருந்தாதார், பழகிப்புனைபுயமழ
குற்றவருமைபங்கார்நண்பானோர், — செயல்பெற்றுயரியகயி
லைக்குரியவர்செங்கோசெங்கீரை, சேவகவேலவனார்துணையான
வர்செங்கோசெங்கீரை. (௮)

மாலாகியமடமானூர்விரகினர்மற்புயசற்காரர், வாராநீப மொய்தாரார்மார்பினர்வச்சிரமணித்தோளர், -- மேலாமறிவினர் நாலாகலைவலர் வித்துவசனர்க்கானோர், வீறுய்மருவலர்மார்பா ணியர்கெடுமிக்கவனப்பானோர்,— பாலாகியகுணமேகூரறிவின ர்பத்திமிகுத்தோர்கள், பார்மேலரசெதிர்தோலாவிருதினர்பற்கு னனொப்பானோர், — சேலார்வயன்மலிபிரமாபுரியவர்செங்கோ செங்கீரை, சேவகவேலவனூர்துணையானவர்செங் கோசெங் கீரை. (கூ)

பாடகமேவியதாளானுட்டியபைம்புயமலையாட, பங்கயமா முகவெங்கதிர்வேர்வதுபனிமுத்தெனவாட, — நாடகமாடிய தாளணிகிண்கிணிநற்குரலிசையாட, நறுமலர்நீபமொய்தெரியல் பொன் மார்பினினறவுபொழிந்தாட, -நீடியகுழையணிகுண்டல மணியதினிகழ்கதிரொளியாட, நிலைபெறுமழகியமணிதிகழரை ஞாணிலவொளியெனவாட,—வாடகமாமலையேநிகரானவராடு கசெங்கீரை, யாவருமாமெனநாவிலங்காதவராடுகசெங்கீரை.()

செங்கீரைப்பருவமுற்றியது.

---

## தாலப்பருவம்.

பொருநீர்வயலில்வரிவாளைபூகமடலிற்குதித்தேறி, பொற் பார்பழுக்காய்குலையூடேபூமிமிசையிற்பலகோடிச்,— சொரிமா ரிகள்போலுதிர்படுத்துந் துள்ளிமுகிலைப்பொள்ளெனவே, துதை த்துக்கிழித்துவிளையாடிச்சுரர்பொன்னுலகிலனைவோரும்,—வெ ருவாய்மருளப்பாய்க்துபின்னும்வேரிமலர்கற்பகமுழக்கி, மீண்

---

தாலப்பருவம் - தாலாட்டும்பருவம். தாலாட்டு - ஓர்வகையாக நாவசைத்துப் பாடும்பாட்டு.

163066

டுங்கழனிப்புனல்மூழ்கிமேவும்புகழ்சேர்கச்சிநகர், —வருமாமத வேளெனச்சிறந்தவல்லோர்தாலோ தாலேலோ, வணங்காமுடி வல்லானைவென்றவல்லோர்தாலோதாலேலோ. (க)

சிந்துந்திரைநீரோடைதொறுந் திரளுங்கருமேதிகள்கோடி, திமிதியெனச்சென்றடைபோதிற்சிறுகன்றெனவேவாவனை, மூந்திமுடுகிமடிதடவிமுலைப்பால்குடிக்கிலம்முலைப்பால், —மேக துங்கடல்போற்பெருகிநறுமுளரிவயலிற்கால்பாயக், — கொங் குமலர்செண்பகவனத்திற்குலாவிப்பலமாமரத்தேறிக், கொம்பி ற்கனியைக்கவர்ந்திளநீர்க்குலைகளுதிரப்பாய்ந்தேறி, —மந்திகு திக்குந்திருக்காஞ்சிவாழ்வோர்தாலோதாலேலோ, வணங்காமு டிவல்லானைவென்றவல்லோர்தாலோதாலேலோ. (உ)(ரு)

கானக்குயில்சேர்மொழிமாதர்கனகமணிமாமேடையின்மே ல்,கதிர்சூழ்மணிக்கோபுரமுடிமேல்காராரரசர்செச்சைகள்மேல், — மீனத்திரள்போல்முத்துமணிமிளிரும்புரிசைத்தலையதின் மேல்,விளங்கும்பளிங்குமண்டபமேல்வீதித்திருத்தேருச்சியின் மேல்,—தானத்தருமச்சாலைகள்மேல்தங்குமறையோர்மாளிகை மேல், சங்கத்தமிழோர்மாமனைமேல்தரிக்குந்துகிற்பூங் கொடிக ள்சென்று, — வானத்தளவும் வளர்காஞ்சி வாழ்வோர்தாலோ தாலேலோ, மயில்வாகனத்தோன் றுணையாகவந்தோர் தாலோ தாலேலோ. (ச)

வீசுந்திரைத்தெண்ணீர்க்கமலம்விரிக்குங்கடல்சேர்புதுப் பூவும், விரைசேர்செந்தாமரைப்பூவுமிகுத்தவனச்செண்பகப்பூ வுங், — தேசுவளர்குங்குமப்பூவுஞ்செழிக்குங்குடமல்லிகைப்பூ வுங், தேனூர்சாதிமருப்பூவுஞ்செறிமட்டவிழ்முல்லையின்பூவுங்,

---

இப்பருவத்தில் மூன்றாவதுசெய்யுள் பிரதிகடோறும் இர ண்டடியே காணப்படுகின்றமையால் அதைநீக்கிப் பதிப்பிக் கப்பட்டது.

O-,15MGP,S
M91

காசுமடற் கேதகைப்பூவும் கழுநீர்ப்பூவும்பலபூவும், கைக்கொண்டேந்திச்சிறியதென்றல்கனகமணிமாளிகைதோறும், — வாசம்பரப்புந்திருக்காஞ்சிவாழ்வோர்தாலோதாலேலோ, மயில்வாகனத்தோன்றுணையாகவந்தோர்தாலோதாலேலோ. (ரு)

உளமாதவனப் * பெருவகைபோலொற்றைத்திகிரித்திருத்தேர்மேலோட்டி நடத்திவரும்போதிலோங்குதிருமேனியின் வெயர்வின், — களங்குதெளியத்துகிலேந்திக்கையால்வீசுந்துகிற்கொடிகள், கமுகுபழுக்காய்க்குலையேந்திக்காணப்புதியதெங்கிளநீர், — கொளுதற்கமரரெதிரேந்திக்கொடுப்பத்திருப்பூவனங்களெலாங், கொய்யுமலர்கள்தினந்தினமுங்குலவிச்சொரியும்புவியிலிந்த, — வளம்பெற்றுயருங்கச்சிநகர்வாழ்வோர்தாலோதாலேலோ, மயில்வாகனத்தோன்றுணையாகவந்தோர்தாலோதாலேலோ. (சா)

வேறு.

செங்கமலாலயமங்கையுலாவியதேருர்சீர்வீதி, செண்பகமேவியவிண்படர்சோலைகள்சேர்பூவார்பானல், — குங்குமமாமுலைதங்கியமாதர்கள்கூர்வேல்சேர்பார்வை, கொண்டவர்நாடுதல்கண்டடர்சேல்பலகூடாதேயோடும், — பொங்கியநீர்மடுவெங்கணுமேவியபூநீரோபாயும், பொன்கனமாமணிதண்டிரையாலெறிபூமாதேசேருஞ், — சங்கரிபூசைசெய்கம்பைநல்லாறினர்தாலோதாலேலோ, தரணியுண்மால்திருமருகசமேதர்தாலோதாலேலோ. (எ)

துதிசெயுநாவலர்விதிமுறைபாடல்கொள்தூயோர்மாயாதார், துகளறுநீபமென்மலரணிதோளினர்தோராமேலாளர், — கதிதருதாரணைமுதிர்சிவயோகியர்கார்போலீவோர்கள், கனபெருவாழ்வினரனகனைநேர்பவர்காணுமாணுளர், — மதனவசீகரரிதமுறுவாசகர்மாறுவீறுளர், வலியகைவேலவரிலகுசகோதரர்

* பெருவகையென்பது - குறுக்கல்விகாரம்.

மாதவரானோர்கள், — சததளமாதுறைநிதிதிகழ்மார்பினர்தாலோதாலேலோ, தரணியுண்மால்திருமருகசமேதர் தாலோதாலேலோ. (அ)

புகலுறுவாய்மைகள்தவறுசெய்யாதவர்போரோருனோர்கள், புகர்முகவானையினுதையமதானவர்பூமேலாள்மார்பர், — நகைமுகமேவியசுமுகனைநேர்பவர்நாணுமாணுளர், நமனைவெல்தாளினர்தமைமறவாதவர்நாகார்நாடாள்வோர், — சுகமொழிமாதர்கள்வெகுமயல்கூர்பவர்சூர்மாவேரோடே, சுருள்படவேல்விடுமுருகசகோதரர்தோலாமாவீரர், — சகலகலாதிபர்முக்கமலாலயர்தாலோதாலேலோ, தரணியுண்மால்திருமருகசமேதர் தாலோதாலேலோ. (கூ)

மருமலர்நீபமொய்திருமணிமார்பினர்மாறேகூறுதார், வலதமிழ்வாணர்கள்புகழதுமேவியமாவீரியதீரர், — திருவளர்வேதியர்கலிகெடநீடியதீராவீருளர், சிவகணபூசைகள்மனதயவொடுசெய்சீமானார்மார்பர், — விருதரசாள்பவர்சமுகவசீகரர்வேள்போலேருபர், விகடவொன்னார்முடிமகுடமதேறியமாமேலூர்தீரர், — தருமதயாபரர்குருவடிநேசிகர்தாலோதாலேலோ, தரணியுண் மால்திருமருகசமேதர்தாலோதாலேலோ. (க0)

தாலப்பருவமுற்றியது.

---

## சப்பாணிப்பருவம்.

செங்கடம்பணிகுடுமியுச்சிக்குநாசிச் செழுங்குவளையிரு விழிக்குஞ், சீர்கொண்டமெய்க்குநெய்க்காப்பிட்டுவளரத்திருத்தாள்கைநீவிவிட்டுக், — குங்குமப்புனலாடிமிருகமதபுனலொடுங்கோதிலாவளகமாட்டிக், கூரரியபட்டாடையாலுடல்புலர்த்திக்குலாவிமடிமீதிருத்திப், — புங்கநீறிட்டுத்தளைக்காப்புமிட்

---

சப்பாணிப்பருவம் - இருகரங்களையும் ஒருங்குசேர்த்துக் கொட்டும்பருவம்.

டினியபுழுகுசவ்வாதுமிட்டுப், போதவெண்சங்கில்நெய்பால் விட்டுளன்புகொடூரிக்கவேபுகட்டிச், — சங்கரியெடுத்துமுத்தாடவளர்கெம்பீரர்சப்பாணிகொட்டியருளே, சங்குந்துவயல் மேவு † செங்குந்தவளநாடர்சப்பாணிகொட்டியருளே. (க)

விரைமடல்கள்செறிகின்றதென்னவனமொருகோடிமேல் வளர்ந்தேகிவிண்ணின், மேவியடருந்தருப்பூமலர்சொரிந்துமணம்வீசுகொலுவேந்தன்மகிழும், — பிரசமொழியுறகச்சிபெண்ணரசியுடனின்றுபெருமைகொடுநடனஞ்செயும், பேடைமயில் வானரம்பையரிளைப்பாறவேபிரியமோடிளநீர்தர, — யிரவிரதசாரதிசெழுங்கமலகரமதுமிளைப்பாறநற்றுகில்களா, லேந்துகொடிவீசியவனும்பரிநடத்திடவிருக்குந்திருக்காஞ்சியார், — தருவனையகரசுமுகர்வரகுமரிதருபாலர்சப்பாணிகொட்டியருளே, சங்குந்துவயல்மேவுசெங்குந்தவளநாடர்சப்பாணிகொட்டியருளே. (உ)

பகலவனுதிக்குமொளிகண்டுவிண்டொருகோடிபங்கயமுறுக்கவிழவே, பச்சைப்பசுந்தேனதிற்பெருக்கோடியேபன்னுசெந்நெற்பணைதொறு, — மகல்கடலெனப்பெருகியோடவருசேரிற்குமன்னப்பெரும்பெடையெலா, மழகுபெறுசங்கினைக்குழவியெனவேயணைத்தணிகொள்சிறகால்மூடவும்,— புகலரியகடைசியர்கள்கண்களைக்கண்டுதெண்புனல்வளர்ந்திடுகயலெலாம், பொருகெண்டையாமெனவுமொருகோடிதிரியுமப்புதுமைகண்டதிசயித்துச், — சகமதிக்குங்கச்சியம்பதிச்செங்குந்தர்சப்பாணிகொட்டியருளே, சங்குந்துவயல்மேவுசெங்குந்தவளநாடர்சப்பாணிகொட்டியருளே. (௩)

வடமறுத்துத்தனதுநிழலினைக்கறுவியேவட்டமிட்டுப்பொருதுவன், வானப்பிறைக்கோடுகொண்டுதிண்டாடநெடுமாம

---

† இது காரணப்பெயர் கணக்கெழுதவோரெல்லாம் கணக்கரென்றாயதுபோலும்.

லைகளைத்துளைத்து, — மிடர்முகிற்றிரளைப்பெருந்துதிக்கையினா லெட்டிப்பிடித்ததிர்க்கு, மிடிப்பெருங்குரல்முழக்கத்தினைப்பி ளிறியேயிடிசத்தமதிலடக்கிப், — படவரும்பகையசுரர்சேனை யும்பொடிபடப்படியடிப்படமிதித்துப், படர்குருதிவெள்ளப் பெருக்கெடுத்தோடவேபதறிவெண்கண்சிவக்குந், — தடமும் மதக்களிற்றுலவிவருவிதரணிகர்சப்பாணிகொட்டியருளே, சங் குந்துவயல்மேவுசெங்குந்தவளநாடர்சப்பாணிகொட்டியருளே.

மிக்கவேதியர்பரவுசீகாழியம்பதியில்வேதியன்புதல்வனா கி, வேதாகமம்புராணங்கற்றுணர்ந்துதவுவிஞ்சையர்மதிக்குமது ணாச், - சொக்கநாதன்முனஞ்சமணொண்ணாயிரந்தொகுதிகூட் டிப்பகைஞராய்ச், சுந்தரசவுந்தரியபாண்டியன்சபைதனிற்சொ ற்றமிழ்க்கவிதைபாடித், — திக்குள்ளபேரொள்ளவைகையாற் றெதிரேடுசெலவிடுத்தமணைவென்ற, செந்தமிழ்ச்சம்பந்தவடிவ மாகியகுமரர்சேடசயனத்தில்வளருஞ், — சக்கிரபாணிக்குரிசி ல்மருகருக்கிளையவர்கள்சப்பாணிகொட்டியருளே, சங்குந்துவ யல்மேவுசெங்குந்தவளநாடர்சப்பாணிகொட்டியருளே. (௫)

முருகுவிரிசெங்காவிமலர்களைக்களைகளையுமோகனக்கடை சியரெலா, முதிரவிளைசெந்நெல்வயல்வாய்தொறுங்கூடியேமு த்துமணிகளைவாரியே, — பருகுமதுவிலைதனக்கனுதினமளக்கு மவர்பரவியிடு * குரவையோசை, படர்கடற்றிரையொலியடங் கலுமடங்கவிரிபங்கயப்பொய்கையெல்லாந், — திரிதரும்பவ ளமெனமின்னுகாலன்னங்கள்சேவலொடுகூடிமருவுஞ், சிறகா லிணைத்துவெண்பணிலங்களைத்தனதுசிறுகுழவியெனவளர்க் குந், — தருதிருவணாமலையில்வருசைவமுதலியர்கள்சப்பாணி கொட்டியருளே, சங்குந்துவயல்மேவுசெங்குந்தவளநாடர்சப் பாணிகொட்டியருளே. (௬)

---

* குரவை- மாதர்கள் ஒருவிதமாய் வாயினால் முழக்குமொலி.

## வேறு.

வளர்தாழிசையுலாநன்னெறிசேர்பரணிகோவைகுற்றமில்நற்றூது, வகைசேர்மடல்கள்சாரமியல்சேர்கவிதைமாலையிற்குறையிற்கூறு, — மொளிசேரகவலாசுகவியோடினியபாவைகற்றவர்நற்றுபாட, லுடனேபுனைசெய்தானைநவமாமணிபொன்னுடைபொற்பணிநற்சீர்மை, — வளமார்கடையநீடுவிரலாழிகள்மதாணிமுத்தணிநட்போடே, வகையாயுதவுவோர்கள்நயவாசகநன்மேலர்சற்குணமிக்கோர்கள், —குளிர்சேர் † கயிலைகாவலுடையோர்பரிவினோர்கள்கொட்டுகசப்பாணி, குருபூசையுமெய்ஞ்ஞானசிவபூசையுமுள்ளோர்கள்கொட்டுகசப்பாணி. (எ)

திதொன்றுநினையாதசிந்தையதுபெற்றோர்கள்செங்கடப்பந்தாரினோர், சேவலங்கொடியினோர்நாவிலங்காதவர்கள்செஞ்சவரமதுபடைத்தோர், — மூதண்டமளவுமரசாளுமச்சூரன்முன்முடுகுமுத்தண்ட்மொழிய, மூவிருமுகத்தவன்றுணையாகவந்தவர்கள்முச்சகமதிக்குமறிவோர், — தாதொன்றுமலரளகபாரமங்கையர்கள்வேள்தன்னைநிகரானவடிவோர், தறுகட்புலித்தண்டைமல்லாரிசேகண்டிசகலவிருதும்படைத்தோர் — கோதண்டமான்மருகராய்வந்தரணசூரர்கொட்டியருள்சப்பாணியே, குருபூசைசிவபூசைமறவாததயவாளர்கொட்டியருள்சப்பாணியே.

நூபுரமுழங்குதிருவடியரம்பையொலாநுண்ணிடையசைந்துமெலிய, நுவலரியகற்பகாடவிமலர்சொரிந்தொருநொடிப்பொழுதுமகலாமலே, — மூபுரமெரித்தநகையேகம்பவாணர்தம்முழுவழகுதிகழகின்ற, முடுகுதூலப்பெரியசிவலிங்கமென்ன

---

† இதனை "வெள்ளிமால்வரைசூழ்காப்பு மிளிர்மணிச்சிகரக்காப்பும் - பள்ளிமால்வரையின்காப்பும்பைம்பொனுபரணக்காப்பும் - வள்ளிதாக்கைகொளென்றுமகிழ்நீற்றுக்காப்புமிட்டுத் - தெள்ளிதாயுமையாடந்தசெங்குந்தம்போலுமுண்டோ," என்னும் ஆன்றோர்வாக்கானு முணர்க.

வேமுத்திநெறியைக்குறித்து, — மாபுரங்கொண்ட திருமேனிமாலயனுமவ்வானவர்குழாத்தினுடனே, வந்துவந்தனு தினமருச்சனைபுரிந்துநல்வரமுதவுகெனவழுத்துங், — கோபுரம்வானளவும்வளர்கச்சிநகரதிபர்கொட்டியருள்சப்பாணியே, குருபூசைசிவபூசைமறவாததயவாளர்கொட்டியருள்சப்பாணியே. (௯)

செந்திருமடந்தையுறைமார்பர் * சோழேந்திரன்சீர்கொண்டசமுகமதனிற், சென்றுவிடைகொண்டுகண்டோர்கள்கொண்டாடவேதீரவீரியமதாக, — வந்துமகமாயிதிரிசூலியாகாளிமுன்வலியவரமதுவினவியே, வாங்கிக்கொண்டப்பொழுதுவீரதத்துவமுடன்வலியதூண்மிசையேறியே,— தந்திரவல்லானுடையபுரிசையுட்சென்றவன்றலையறுக்கும்பொழுதினிற், றையலவன்மனைவிமங்கிலியமுதவென்னவேதந்துபொற்றலைகொணர்ந்தோர், — கொந்தலர்கடம்பணிபுயாசலர்மகிபாலர்கொட்டியருள்சப்பாணியே, கோதற்றசெங்குந்தர்வீரநாராயணர்கள்கொட்டியருள்சப்பாணியே. (௧௦)

சப்பாணிப்பருவமுற்றியது.

---

## முத்தப்பருவம்.

---

விம்முங்கடலிற்பணிலமுத்தும்விரவுங்கழைசோரிப்பிமுத்தும், மேகத்துதிக்குமணிமுத்தும்வேயினிடத்துவிளைமுத்தும்.—

---

* இதனை "வல்லான்றன்றிருத்தேவிமங்கிலியம்பிழையாமன்மடித்தானேற்றிங் - கெல்லோருமங்கிலியப்பிச்சையிடுமெனத்தான்வீழ்ந்திரப்பவேண்டிக் - கொல்லாமல்விடுதல்புகழெனக்கருதியோகற்பின்கொண்டவாய்மை - நல்லார்களிருந்தவையின்புகழ்கைக்கோகாத்தது கொல்நஞ்செங்குந்தம்." எனப்பெரியோருங்கூறினர்.

முத்தப்பருவம் - முத்தங்கொள்ளும்பருவம்.

கொம்மைமுலையார்களத்தின் முத்துங்குளிர்மாமதியந்தருமுத்துங், † கோகனகத்தின்மலரின்முத்துங்குரண்டத்தலையின் விளைமுத்துஞ், -செம்மைதிகழுங்கரும்பின்முத்துஞ்சீதப்பனிசூழ்செந்நெல்முத்துஞ், சிறக்கும்பவளமனையவுங்கள்செவ்வாய்முத்துக்கிணையாமோ; — மும்மண்டலமும்புகழவந்தோர்முத்தந்தருகமுத்தமே, மொழிநாவிலகாமுதலியர்கள் முத்தந்தருகமுத்தமே.

படிக்கும்புலவோர்தங்களுக்கும்பழமாமறையோர்தங்களுக்கும், பாரிலுயர்ந்ததவத்தினர்க்கும்பசியால்மெலியும்வறிஞோர்க்கும், —வடித்தபுகழ்சேரரசருக்குமலரோன்முதலாந்தேவருக்கு, மகிமைக்குருவாசிரியர்க்கும்வளர்சங்கீதவிஞ்சையர்க்குங்,--கொடிப்பொன்னிடையார்தங்களுக்குங்குலயாநிலைமையுடையார்க்குங், கொண்டவறுமைகுலைந்தோடக்குளிர்பொன்கொடுத்தேயவர்விரத, — முடிக்குந்திறமையுடையார்கள் முத்தந்தருகமுத்தமே, மொழிநாவிலகாமுதலியர்கள்முத்தந்தருகமுத்தமே. (௨)

கடிகொள்கமலப்பசுந்தேனுங் காமர்குமுதச்செழுந்தேனுங், கனமூன்றியகொம்பிற்றேனுங்கருதுங்கொடிமல்லிகைத்தேனும், — வடிகொண்மலர்ச்செண்பகத்தேனும்வாசப்பசுந்தாழையின்றேனும், வண்டுகூடியுழக்குபுன்னை மலரிற்சொரியும்பசுந்தேனும் — மடல்விண்டலர்முல்லையிற்றேனும்வாய்த்தமலர்ச்சாதியின்றேனும், வழிந்துதிரண்டுபெருக்காறாய்வயல்கடோறும்பாய்ந்துதிரை, — முடுகுந்திருக்கச்சியிலரசர்முத்தந்தருகமுத்தமே, மொழிநாவிலகாமுதலியர்கள்முத்தந்தருகமுத்தமே. (௩)

தொல்லைமருவார்போர்க்களத்திற்றுதிக்கைவலியமால்யானை, சுரதநடனப்பரித்திரள்கள்சூழுமிரதங்காலாள்கள், — வில்லும்வாகைக்கணைத்திரளும்வீசுந்திரள்வாள்வல்லயமும், வெடியுங்

---

† இப்பதம் வடமொழியில் கோகநதமென்றே வழங்குகின்றது.

துடிப்பீரங்கிகளுமிக்கமுனைக்கட்டாரிகளு, — மொல்லையுடன் கைவிட்டயாவுடல்கால்தலைமூளைகள்சிதறி, யோடியுதிரம்பெருக வெல்லுமுயர்வீரியர்கைராகுராமர், — முல்லைநகைச்செங்கனி வாயர்முத்தந்தருகமுத்தமே, மொழிநாவிலகாமுதலியர்கள்முத் தந்தருகமுத்தமே. (௬)

இந்துங்கதிருந்திசைமாறி யெழினுங்கடனீர்சுவறிடினு, மீட்டவளர்ந்தமகமேரு விடிந்துபெயர்ந்துவிழுந்திடினும், — வந்துபொழியுமழைமாரிமறுத்துத்துளிகள்வறண்டிடினும், வானத்தமரர்க்கரியதெய்வமறைமாமொழிபொய்வழங்கிடினுஞ், — சந்தமிகுந்ததிருமாலின் றனதுகமலக்கரத்தில்வைத்துத், தரிக்குங்கணைகள்தவறிடினுஞ்சாற்றுமொழிகள்தப்பாது, — முந்து புகழ்க்கச்சியிலரசர்முத்தந்தருகமுத்தமே, மொழிநாவிலகாமுதலியர்கள்முத்தந்தருகமுத்தமே. (௭)

வேறு.

பத்திகொடுக்குந்தமிழ்நூலைப்படித்துப்படரும்பேரறிவைப், பால்போற்கருதிப்பலகாலும்பழகப்பழகப்பரிந்தோடச், — சித்தி கொடுக்குந்தவத்தோரைச்சேர்ந்துமவர்கள்திருவாக்கைச், செம்மைப்பொருளாமெனக்கருதித்திரியுங்கரணத்தினையடக்கி, — யத்துவிதத்திலொருமைகொண்டங்கைசவற்றிருக்கு மொருபொருளை, யணுகிப்பெருகுமானந்தவருள்சேர்கடலின்மிழ்கின்ற, — முத்திகொடுக்குந் திருக்காஞ்சி முதல்வோர்முத்தந் தருகவே, மோதுங்கரவல்லானைவென்றோர்முத்தந்தருகமுத்தமே. (௮)

மன்னுங்கிரிகையோர்தமக்குமாசற்றுயர்ந்ததவத்தோர்க்கு, மணக்குமறைவேதியர்தமக்கும்வாரியுடுத்தபுவியோர்க்கும், —

---

இப்பருவத்தில் எ - அ - கூ - செய்யுட்கள் பிரதிகடோறும் இடையிடையே இரண்டொரு அடிகளே காணப்படுகின்றமையால் அவைகளைநீக்கிப் பதிப்பிக்கப்பட்டன.

பன்னுந்தமிழைப்படித்தோர்க்கும்பசித்தவருக்கும்பகையோர்க்கும், பாரிற்கடன்பட்டடைந்தவர்க்கும்பகருஞ்சமயவாதியர்க்கு,—மின்னுங்கிரீடவரசருக்கும்வேண்டித்தமைவந்தடைந்தோர்க்கும், வேளையெரித்தகண்ணன்முதன்மிக்கதேவர்பூசனைக்கும்,—முன்னின்றருளுங்கனகமழைமுகிலோர்முத்தந்தருகவே, மோதுங்கரவல்லானைவென்றோர்முத்தந்தருகமுத்தமே. (௧௦)

முத்தப்பருவமுற்றியது.

## வருகைப்பருவம்.

குளமேவியசெந்திலதமின்னார்குவளைக்களைகள்பலகளைந்து, குரவையிடும்பூங்கழனிதொறுங்குதித்துமடைதோய்கயல்வெருள,—விளமேதிகள்வந்தொருகோடியிறங்கிப்படியவருவாளை, யெழுந்துகுதித்துக்கமுகவனத் திலகுமடலின் றிரள்கிழித்துத்,—தளமேவியசெங்கழனிவயற்றலைகடோறும்விளையாடித், தத்திக்கயல்முக்கனிகளெல்லாந்தானேயுழக்கித்திரும்பிவரும்,—வளமேவியதென்கச்சிநகர்வந்தோர்வருகவருகவே, மாகாளியைக்கால்விலங்குதைத்தோர்வருகவருகவருகவே. (௧)

நலமாகியமல்லிகைவனத்தில்நறும்பூவருந்திச்சுரும்பினங்கள், நயந்துவிதஞ்சேரிசைபாட நத்துங்கவிகள்தாளமொத்தக்,—குலமாமயில்களொருகோடிக்குலவிநடனமதுபுரியக், கோகனகச்செந்திருவிருந்துகூத்துப்பார்க்குமுத்துவனம்,— பலமாமணிகள்கொடைகொடுப்பப்பசும்பூவனங்கள்மலர்சொரியப், பாராளரசர்கண்டுமெய்ச்சும்பான்மைதவிராப்புகழ்மேவு,—மலை

வருகைப்பருவம் - வருகையைவிரும்பிய பருவம்.

இப்பருவத்தில்-பிரதிகடோறும் ௨-௩-செய்யுட்களின் கடைசி அடிமாத்திரம் காணப்படுகின்றமையால் மற்ற அடிகள் சிதலமாய் விட்டனபோலும்.

மாதுமையாள்தவஞ்செய்கச்சிவாழ்வோர்வருகவருகவே, வளச்செங்குந்த * குலத்தில்வந்தோர்வருகவருகவருகவே. (௪)

நட்டாரிரவோர்மறையோர்க்குநாட்டுந்தமிழ்நன்னாவலர்க்கு,நம்பிமிகுநீர்தம்பமெனநாடியடைந்தோர்தங்களுக்கும், — பட்டார்கொடிசேரிடையார்க்கும் பான்மையுடையதவத்தோர்க்கும், பசித்தோர்தமக்கும்பாருலகிற்பலருமதிக்கப்பான்மையுட, — னிட்டார்பெரியோரெனக்கேட்டிங்கிரவும்பகலுமருள்புரியு, மீகையுடையபெரியோர்களேமக்களபம்பரிமளிக்கு, — மட்டார்கடப்பப்புயவீரவாகுத்தலைவர்வருகவே, வளஞ்சேரருணபுரியில்வந்தோர்வருகவருகவருகவே. (௫)

சத்தம்பயிலுமழைமுகிலுந்தழைக்குஞ்சிதக்கமுகினமுந், தந்திமருப்புமலைவேயுஞ்சசியும்பனித்தண்டாமரையுங், — கத்துங்கடல்வாயிப்பிகளுங் கரும்புஞ்சனிப்பொற்றிருப்புயமுங், கன்னிமடவார்பொன்கழுத்துங்கருஞ்சூகரத்தினிருமருப்புஞ்,— சுத்தம்பயிலும்பசுத்தந்தந்தோயுந்தூயசங்கினமுந், துகடீர்குரண்டமணிச்சிரசுந்துள்ளும்புனல்சேர்மீன்றலையு, — முத்தஞ்சொரியுந் திருக்காஞ்சிமூதூர்க்கிறையோர்வருகவே, மூனைசேர்பஞ்சவணவிருதுமுடிக்குந்திறலோர்வருகவே. (௬)

செச்சைமணிமாமேடையினுந்தேரோடியநற்றெருத்தோறுஞ், செந்நெற்பசும்பூங்கழனியினுந்தீட்டுஞ்சுதைமாளிகைமீதும், — பச்சென்றொளிருமரகதமும்பரிகைமேடைக்கொடிகளினும், பால்போலெறிக்குந்தரளமணிப்பணிக்கோபுரத்தின்முடிமிசையு, — முச்சந்திகழ்வெண்மதிதிகழுமோங்கும்பளிங்

* இதனை "உலத்தினிற்புட்பராகமொளியினிற்கதிராமைந்து - புலத்தினிற்கருங்கண்வாவிப்பூவினிற்கமலஞ்சொல்லுங் - குலத்தினிற்செய்யகுந்தங் குன்றினின்மேருக்குன்றந் - தலத்தினின் மதுரை மேலாந் தரமெனுந் தகைமைத் தம்மா" என்னும் மதுரைப்புராணத்தானுமுணர்க, தலவிசேடப்படலம்-செ-௨௬.

குமாடத்து, மும்பர்தொழுமாலயந்தோறுமொண்பூங்கமலமா திருந்து, — மெச்சுபுகழ்சேர்கச்சிநகர்விளங்குந்திறலோர்வருக வே, வெண்மாமதிநற்குடைநிழற்றும்வேள்மைத்துனமரர்வரு கவே. (எ)

வேறு.

திலதநுதலிலெழுதியழகுசேர்க்கவருகவருகவே, செவ் வாய்க்கனிமுத்தாடமடியிற்சேர்த்தணைத்திடவருகவே, — மு லைகொடுத்துடல்புழுதிதுடைத்துமுத்தாடிக்கொளவருகவே, முழங்குஞ்சிலம்புங்கலீன்கலீனென முன்னேயோடிவருகவே, — நிலவெனுமிளநகையுலாவிநில்லாதோடிவருகவே, நித்தில ச்சுட்டிபொன்கதிர்பரப்பிடநிறைபொன்னணியவருகவே, —ம லைமடந்தைசுதர்காமுகில்மன்னர்வருகவருகவே, வல்லானுயிர் கொல்லாதவீரவாகுத்தலைவர்வருகவே. (அ)

விதரணமிகு நிபுணசெங்குந்தவீரர்வருகவருகவே, விண் ணோர்சிறையைவிடுவித்தவரைமேன்மைசெய்தவர்வருகவே, — சதுருபாயதருமநெறிகொள்சத்தியரிச்சந்திரர்வருகவே, தாத விழ்பூமலர்நீபமாலிகைதரிக்குமன்னவர்வருகவே, — யதிரு மொன்னலர்பணிபதாம்புயராகேந்தாளவர்வருகவே, யட்டதிக் கெங்கினும்புகழ்படைத்திமெதுலர்வருகவருகவே,—மதுரைந கரிலரசுபுரியுமன்னர்வருகவருகவே, வல்லானுயிர்கொல்லாத வீரவாகுத்தலைவர்வருகவே. (கூ)

சேலார்விழிகளைனச்சொல்மாதர்கள்தேடுந்திண்புயர்வரு கவே, சிரச்சிங்காதனங் † கவிக்குதவியதீரவீரியர்வருகவே, —

* மஹாகவியாகிய ஒட்டக்கூத்தனை ஓர் பிரபந்தம்பாடும்ப டிவேண்டினனொன்பதும், அவர் ஆயிரந்தலைகளைப் பரிசாகப்பெ ற்று அவற்றையே சிம்மாசனமாக்கி அதின்மீது எழுந்தருளி ஈ ட்டியெழுபது என்னும் ஓர் பிரபந்தத்தைப்பாடி முடித்தனரெ ன்பதும் செங்குந்தர் புராணவரலாறு. இது நோக்கியே சிரச்சிங் காதனங் கவிக்குதவியதீரர் என்றார்.

நாலாகலைகற்றுலகிற்பரந்தநல்லோர்வருகவருகவே, நம்பினபே ைத்தம்படமெனவைத்துநடத்துநாதர்வருகவே, — சூலாயுதனை ச்செயித்தவானவர்துணையடிக்கன்பர்வருகவே, சருதிநிலைமை மனதில்நிறுவுதூயநேயர்வருகவே, — மாலோன்மருகர்க்கந்தன் சோதரர்வரிசையாளர்வருகவே, வல்லானுயிர்கொல்லாதவீரவா குத்தலைவர்வருகவே. (௧0)

வருகைப்பருவமுற்றியது.

## அம்புலிப்பருவம்.

விண்ணிலுமெங்கையர்க்கரசுநீயிவர்கள்புவி மேன்மங்கை யர்க்கரசராம், விரவுமாகாயவிருள்நீயொழிப்பாயிவர்கள்மிடியர் கலியிருளொழிப்பார்,— மண்ணுலகினிற்பயிர்க்கினிமைநீயிவர் கள்பலவான்பயிர்க்கினிமையர்களாம், மாமதியெனும்பெருமை யுடையைநீயிவர்புத்திமதியெனும்பெருமையுடையார், — தண் ணொளிபரப்புவாய் நீயிவர்கள்மடவார்கள் தண்ணொளிபரப்பி யருள்வார், தண்குமுதநண்பனீயிவர்கள்மடவார்கள்வாய்த்தண் குமுதநண்பராவார், — ரண்ணலாகியவுனக்கிவர்களொப்பாவர்கா ணம்புலீயாடவாவே, யாதிசெங்குந்தர்சிவசோதிதன்மைந்தரு டனம்புலீயாடவாவே. (௧)

போதரவதாயுனதுகலைகள்பதினாறலாற் புகவில்வேறிலையி வர்க்குப், பூரணமதானகலையறுபத்துநாலுண்டுபொய்யில்லைமெ ய்யுண்மைகாண், — சீதமிகுமுனதெழிலிராக்காலமல்லாதுசெ ய்யும்பகற்போதிலைச், செப்புமிவர்கீர்த்திப்பிரகாசமெண்டிக்கி னுந்திகழிரவுபகலுமுளதா,—மேதமில்லாமலேயிவர்களுடனின் னைநிகரிடினுநீநிகரில்லையா, லெங்கள்பெருமான்முடிக்காபரண

அம்புலிப்பருவம் - சந்திரனை விளையாட அழைக்கும் பருவம்.

மாமென்ன வெண்ணியே மிகவு நண்ணி,—யாதரவதாயுன்னை வரவழைத்தாரிவர்களம்புலீயாடவாவே, யாதிசெங்குந்தர்சிவ சோதிதன்மைந்தருடனம்புலீயாடவாவே. (உ)

அம்பரமதுன திடத்தரவினுல்மிகவுநீயல்லல்பட்டயர்வதெல்லா,;மம்பிகையிடத்துநம்பெருமானுடன்சொல்லியவ்வாதனைப்போக்குவா, — ரும்பர்வந்துன துடலிலமுதகலையைப்பறித்துண்ணநீமெலிவதெல்லா, மோங்குமயில்வாகனத்தண்ணலுடனேசொல்லியும்பரணுகாமற்செய்வார்,—நம்பிநீயுறைகின்றதானமுந்தானமலநாடியிவர்பாலடைந்தால், நமதம்மையுமையெனுந்தாயுடன்சொல்லியேநற்கதியிலீடேற்றுவா, — ரம்புவியிலிவர்களைச்சேருநற்றுணையுனக்கம்புலீயாடவாவே, யாதிசெங்குந்தர்சிவசோதிதன்மைந்தருடனம்புலீயாடவாவே. (௩)

மிசையானதேவருடனீயுமச்சூரனுல்வெஞ்சிறைப்படுமந்தநாள், வீரமயில்வாகனன்றுணைவராய்வந்துன்னைவிடுவித்ததறிகிலாயோ, —திசைநான்முகன்றனதுமைந்தன்செய்வேள்வியிற்சிக்கிவிண்ணவரோடிடச், சிவஞானவீரமாவீரனடியாலுனைத்தேய்த்துவிட்டதையறியையோ, — பசியாமலெந்நாளுமுப்பத்திரண்டறம்பாலிக்குமம்மையுமையாள், பாதச்சிலம்பிற்பிறந்தாரழைத்தாற்பயப்படேலிவர்முனிந்தா, — லசையாதவெண்டிக்கிலொருதிக்குமிலையுனக்கம்புலீயாடவாவே, யாதிசெங்குந்தர்சிவசோதிதன்மைந்தருடனம்புலீயாடவாவே. (ச)

சாரசமிகுந்தமறையாவையுந்தருகின்ற தாமரைத்தவிசனுமவன், றந்தையாகிய திருமுகுந்தனேடேயினித்தக்கதிக்குப்பாலரு,-- மூரிவெற்பனையவெள்ளானையும்முப்பத்துமுக்கோடிதேவர்பலரு, முடியடியுமறியாதசிவனுடையசீர்பாதமுறைமையிற்றுங்குமுரவோர்; — காரைகிகரானகுழல்மடமாதர்நடமாடுகனகமயமேடைதோறுங், கங்குல்பகலென்னவேயொளிவிளக்குஞ்செயக்கதிரொளிப்பிரபையெனவே, — யாரமுத்தணிகச்சிமாந

கர்க்கிறையருடனம்புலியாடவாவே, யாதிசெங்குந்தர்சிவசோதிதன்மைந்தருடனம்புலியாடவாவே. (௫)

வேறு.

கம்பலைபுரிவிரிகடலேழுங்குலகனகிரியோரேழுங், கருணைபெறுந்தவரொழுவருமருடருகன்னியரொழுவோருந்—தம்பமதாகியகுலகிரியெட்டுந்தருமிகுதிசையெட்டுந், தந்திகளெட்டுடனுரகமதெட்டுந்தகுபாலகரெட்டுஞ், —செம்பதுமாலயமலர்மாதுந் தமிழ்செப்பியகலைமாதுந், திசைமுகன்முதலியவிண்ணோருந் தொழுதேவிபராபரையா,—எம்பிகைதந்திடுமைந்தரோடாடுறவம்புலிவருவாயே, யறுமுகவேலவர்துணைவரோடாடுறவம்புலிவருவாயே. (௬)

உலவியதிரைவிரிபாலாழியில்வளருரகபணுடவிமே, லும்பர்தொழுஞ்சலசத்திருமகளுடனுறவிழிதுயில்கூருங், — கலவியில்மருவிடுபொழுதொருமதகரிகஞ்சமென்மலர்கொய்யக், கண்டொருமுதலைபிடித்திடவெருவிக்கரிகோமூலமென,—வுலகொடுவானுலகறியக்கதறியவொருகுரலதிரவிடுத், துள்ளந்துள்ளித்தள்ளாடிக்கொண்டுயிர்போமெனவஞ்சி,—யலறியபோதேயருள்மால்மருகரோடம்புலிவருவாயே, — யறுமுகவேலவர்துணைவரோடாடுறவம்புலிவருவாயே. (௭)

முரசமலாடங்கொங்குதெலுங்குமுடுகியகருநாடம், மோதியமுனையிடுமொட்டியமீழமுதிர்குகுதந்துளுவ, — முனைசெறிசிங்களம்வங்காளம்புகழுயர்கருமலையாள,மோதியவங்கங்கலியாணந்திருவுயர்சோழங்குடகங்,—கருதியமகதமராடஞ்சிந்தொடுகமலஞ்செறிசீனங், கவினுறுமைம்பத்தறுதேசத்துளகதிர்முடியுடையமகா,—வரசர்மதித்திடுமன்னவரிவருடனுடுகவம்புலியே, யறுமுகவேலவர்துணைவரோடின்புறவாடுகவம்புலியே. (௮)

அம்புலிப்பருவமுற்றியது.

---

இப்பருவத்தின் கடையில் இரண்டுசெய்யுட்களும் இறந்துவிட்டனபோலும்.

# சிறுபறைப்பருவம்.

சந்திரக்கவிவாணரிசைமுழக்கப்பெருகுசதுர்வேதமறைமுழக்கத், தண்காவின்மலரளிகள்குமுறொலிமுழக்கிடத்தந்திவீணைகள்முழக்கப், — பந்திமதகரிகள்குரலொலிமுழக்கத்திருப்பரதமடவார்முழக்கப், பன்னுசுரமண்டலமுழக்கமுமுரசமும்பரிவுகொடுமெதிர்முழக்கத்,—திந்திமியெனவாடுபெரியின்மே * லரசருந்திறையிடுந்தொனிமுழக்கத், திகழுமுலைமடமாதராலத்தியேந்தியவர்திருமொழிகள்பலமுழக்கச், — செந்திருப்புயவீரவாகுதேவத்தலைவர்சிறுபறைமுழக்கியருளே, செங்கடப்பந்தொடைத்துங்கவெற்பனையபுயர்சிறுபறைமுழக்கியருளே. (க)

வீறுடுமொன்னலர்கள்மகுடம்பிளக்கவேவெட்டும்பரிக்குநகுலர், மென்மீசையுடையவர்களபிமானபூடணர்கள்வீரசூரனைவென்றவர்,—மாறுடு † பாவகோடிகளெலாமோடிடவழங்கிடும்பிச்சையுடையார், மாகாளிகையைப்பிடித்தவர்கள்முசுகுந்தன்மல்லாரியைப்பறித்தோர், — தாறுடுகதலியும்பாகலுஞ்சூதமுந்தண்கனிசுமந்துநிற்குந், தண்டலையில்விண்டழுவுவாழைபாய்ந்தக்கனிச்சாறுபாய்ந்தோடுவெள்ளஞ், —சேறுடுகழனி

---

சிறுபறைப்பருவம் - சிறியபறைகொட்டி விளையாடும் பருவம்.

* இதனை "வங்கோடீழங்கன்னட மாராட்டிரங்குச்சரஞ் சீனங் - கொங்கோடெங்குந்தரத்திறையேகொள்ளுமின்னார்செங்குந்தம்" எனப்பெரியாரும்பணித்தார்.

† இதனை "கோக்களைமின்னனைத்தவத்தனைக்குலத்தில் வேத - மாக்களைச்சிசுவைக்கொன்றான்செய்ந்நன்றிமறந்தானை சா - னைக்கமதழித்தான்பாவமனைத்துஞ்செங்குந்தர்வீதி - தேக்கிடப்பிச்சைவாங்கியுண்டிடத்தீருமன்றே" என்னும் மதுரைப்புராணத்தானுமுணர்க.

சூழ்கச்சிநகருக்கதிபர்சிறுபறைமுழக்கியருளே, செங்கடப்பந்
தொடைத்துங்கவெற்பனையபுயர்சிறுபறைமுழக்கியருளே. (உ)

பூவகைத்தளிர்களொருகோடிதண்டலைதொறும் பொருவி
லிசைபலமுழக்கப், புண்டரீகக்கழனிவாய்தொறுங்கடைசியர்க
ள் புகல்குரவையொலிமுழக்க, —மாதவத்துமையரியதவமுய
லுமருகிலும்வருகம்பையலைமுழக்க, வாசமலரோடைதொறுமு
க்கோடிசங்கினம்வளமைகொளுமொலிமுழக்கப், — பாவகத்த
வமுனிவர்பூசைவேளைக்கினியபன்மணித்தொனிமுழக்கப்,பன்
னாளுமிந்தவகைமாறுமுழக்கமேபயில்கச்சியம்பதியினோர், —
சேவகக்கந்தன்சகோதரப்பிரபுடீகர் சிறுபறைமுழக்கியருளே,
செங்கடப்பந்தொடைத் துங்கவெற்பனையபுயர் சிறுபறைமுழக்
கியருளே. (௩)

தம்பமெனுமகமேருவில்லுடையமகதேவர்தம்புதல்வரம்பு
யமலர்த், தையன்மூலமீதிலேதுயில்புரியுநெடியமால்தயவுபு
ரிதிருமருகர்பூங், — கொம்புடையமதயானைமேலுதயமதரு
பர்குருவின்மொழிதவிராதவர், கோலமிகுசிவபூசைமேலதிகத
யவாளர்குலபுரவிநகுலனனையா, — ரம்புவிமதிக்கவருவீரசெ
ங்குந்தர்பே ரபிமானபூடணமுளோர், ராதிகயிலாயகிரிநாதரரு
ள்பெற்றவர்களகிலம்புரக்குநிபுணர், — செம்பவளமடமாதர்கு
ம்பவிளமுலைநேயர்சிறுபறைமுழக்கியருளே, செங்கடப்பந்தொ
டைத்துங்கவெற்பனையபுயர்சிறுபறைமுழக்கியருளே. (ச)

புகழ்பெற்றசூரன்மாமரமதாயுருவுகொடுபுக்குநிற்குங்கட
லிடைப், போந்துவடிவேல்விட்டெறிந்துமுடிசிதறிடப்பொரு
துவருமுருகர்துணைவர், — நகைமுத்தமனையசெந்திருமகளைய
கலாதநாகரிகமாலின்மருகர், நாடறியவேப்பட்டமானமுங்காத்
தவனைரட்சித்தகருணையுடையார், — துகைபெற்றவறுபத்துநா
லுகலைகற்றவர்கள்சொல்வாணருக்கினியவர், துட்டவல்லானு
டையபட்டங்குலைத்தவர்கள்சுரிகைமல்லாரியுடையார், — செக
மெச்சு பஞ்சவண விருதுடைய மகராசர் சிறுபறை முழக்கி

யருளே, செங்கடப்பந்தொடைத்துங்கவெற்பனையபுயர்சிறுபறைமுழக்கியருளே. (ரு)

பரிவுடையமுப்பத்துமுக்கோடிதேவரும்படர்முடித்தேராகவும், பரிதிமதியிருவருந்தருமுருளையாகவும்பசருமறைவடமாகவும், — விரிகமலமலரயன்னூர்பாகனாகவும்மேருகிரிசிலையாகவும், மிக்க்வாசுகிநெடியநாணாகவுங்கருணைமேவுமால்கணையாகவுந்,— தருமனத்தக்கினிக்கிடுசெமித்தாகவுஞ்சமர்செயநினைக்குமந்நாள், தக்கவிவர்மனவலிமைகண்டுதேரடியிடத்தான்முரிந்திடநகைத்தே, — திரிபுரமெரித்தவொருபரமசிவனருள்மைந்தர்சிறுபறைமுழக்கியருளே, செங்கடப்பந்தொடைத்துங்கவெற்பனையபுயர்சிறுபறைமுழக்கியருளே. (சா)

கோமேவுவதனக்குறச்சிறுமியுறைகின்றகுளிர்தினைப்புனவனத்திற், கோல்பிடித்துச்சிமயிர்மேல்வெளுத்துக்கிழக்கோலமுடனேகியவள்முன்,—நாமேவுமிதமுணாத்தினியதினைமாவுண்டுநாவுலருதெனமயக்கி, நற்புனச்சுனைவழியிலற்புதமணம்புரியுநற்றணிகைமுருகர்துணைவர்,—பாமேவுமதுரவிசைபாடிச்சுரும்பினம்பைந்தேனினமுதநுகரப், பசுமுகைமுறுக்கவிழ்ந்தலர்விரிந்தொழுகுமவிர்பண்புபுனைமல்லிகைப்பூந்,— தேமேவுதண்டருத்தொண்டைவளநாடதிபர்சிறுபறைமுழக்கியருளே, செங்கடப்பந்தொடைத்துங்கவெற்பனையபுயர்சிறுபறைமுழக்கியருளே. (எ)

அச்சமாயோடிவந்தபயமென்றவர்தம்மையாதரிக்கின்றபெரியோ,ரஞ்சாதபகைவரிடநெஞ்சாணியாகவேயடல்செய்படைகொண்டபெரியோர்,—வச்சிரபாணிக்கடவுள்மெச்சவேசூரனைவதைத்துதவிசெய்தபெரியோர், வானவர்கள்சஞ்சலந்தீர்த்தருளிவானுலகம்வாழ்விக்கவந்தபெரியோ,—ருச்சமாமதியமுங்கதிரவனுமாறுடியோங்குதென்றிசைவடதிசைக், குதயமாய்வருகி

---

இப்பருவத்தில், அ - கூ - எண்ணுள்ள கவிகள் இடையிடையே சீர்கள்குறைந்து காணப்படுகின்றமையால் விடுத்துப்பதிப்பிக்கப்பட்டன.

னுமொல்காதமெய்வசனமுற்றுரைக்கின்றபெரியோர், — செச்சைமாளிகைமேவுகச்சிநகர்வீரர்கள்சிறுபறைமுழக்கியருளே, செங்கடப்பந்தொடைத் துங்கவெற்பனையபுயர் சிறுபறைமுழக்கியருளே. (௧௰)

சிறுபறைப்பருவமுற்றியது.

---

## சிற்றிற்பருவம்.

பூவிற்சிறந்ததிருமாதும்புகலனூல்வேதக்கலைமாதும், பொன்னாட்டுயர்ந்தசசிமாதும்போற்றுமுமையாள் திருச்சிலம்பில்,— மேவிப்பிறந்து*காலனுடன்பெரும்போர்விளைத்தவிறலோர்கள்,

---

சிற்றிற் பருவம்-பெண்சிறார்கள் மண்ணினாலமைத்து விளையாடும் சிறுவீட்டை காலால் அழிக்கும் பருவம்.

* காலனுடன் போர்விளைத்தாரென்பதை :—

"சித்திரவல்லியென்னுஞ்சீருடைச்செல்வியங்கோர்
தத்தையைவளர்த்தலோடுந்தண்டகத்தருமன்றேவி
யத்தனிக்கிளியைவெஃகவாங்கவன்றூதர்போந்து
கைத்தலத்ததனைப்பற்றிக்கடிதினிற்கொடுபோய்யீந்தார்.

அவ்வழிகிள்ளைகாணாளாயிழையயர்தலோடு
மெவ்வழிபோயிற்றேவென்றிறையவனுலகினாடி
மைவழிகின்றமேனிமறலிதன்றுணைவியானாள்
கைவழியமருந்தன்மைகதுமெனவுணர்ந்தானன்றே.

பூதலம்புரந்தசெங்கோற்புரவலன்வீரமொய்ம்ப
னாதியர்தம்மைக்கூவியங்ஙனந்தூண்டவன்னோ
ரோதமில்கரிதேர்வாசியெல்லையின்மறவர்சுற்ற
மேதியங்கடவுண்மூதூர்விரைந்துபோய்வளைந்துகொண்டார்.

தன்னகர்வளைதலோடுந்தருமன்வந்தேற்றகாலை
யன்னவனொடுபோர்செய்தேயடுமுரண்டொலைச்சியம்பொன்
வன்னமென்கிள்ளைதன்னைவாங்கினர்மீண்டுந்தங்கண்
மின்னுளமகிழநல்கிவேந்தற்குவிசயஞ்செய்தார்".

எனவருங் கந்தபுராணத்தானுமுணர்க.

விளங்கு முகத்தில் மென்மீசை மிகவே படைத்த பெரியோர்கள், — நாவிற்சொலினாவிலங்காதநல்லோர்வல்லான்மனைக்கன்று, நன்மங்கிலியங்கொடுத்தருளிநாட்டிற்புகழைப்படைத்தோர்கள், — சேவற்கொடிநல்விருதுடையோர் சிறியோஞ்சிற்றில்சிதையேலே, சேணாட்டமரர்சிறைவிடுத்தோர்சிறியோஞ்சிற்றில்சிதையேலே. (௧)

காரார்சோலைக்கரையிடத்திற்கமலஞ்சிறந்தநறுநிலத்தில் கனவண்டரளவண்டல்செய்துகருதிக்கருதிவிளையாடி, — நேராய்மலர்பூங்குழல்முடிக்கநிறைந்தமதியொன்றறியாது, நிற்குமடப்பேதையருமதுநிகர்வின்முகத்தையறியோமா, — லாராய்புலவர்கவியலவேயடல்சேர்வல்லான்றலையலவே, யஞ்சாச்சூரன்புரமலவேயழகாரடிகள்வருந்தாதோ, — சேராவரசர்முடியலவேசிறியோஞ்சிற்றில்சிதையேலே, சேணாட்டமரர்சிறைவிடுத்தோர்சிறியோஞ்சிற்றில்சிதையேலே. (௨)

காண்டற்கரியமணவாளர்கருத்தைத்திருத்தும்விழியாலே, காட்டிமயக்கிவரவழைக்கக் கருத்தொன்றறியாப்பேதையர்கள், — வேண்டற்குரியசிற்றில்முற்றும்வேண்டாதழிப்பதுங்களுக்கு, விருப்போகருப்பநீர்பயில்சொன்மெய்த்தாய்மார்கள்பத்தியுடன், — பூண்டற்கரியபணிதிருத்திப்புகழ்ந்துவிளையாடென்னவிடுத்தால், பொன்னார்சிலம்புகலின்கலினப்போந்துவிளையாடாமலொன்னார், — தீண்டச்சிவந்தமலர்த்தாளாற்சிறியோஞ்சிற்றில்சிதையேலே, சேணாட்டமரர்சிறைவிடுத்தோர்சிறியோஞ்சிற்றில்சிதையேலே. (௩)

மேவுந்திசையிற்கிரிகளெட்டும்விளங்குமணித்தாளெனநிறுவி, மிளிர்சேர்சக்கிரவாளநெடுவெற்பைச்சுவராயொப்பமிட்டுத், — தாவும்வெளியாகாயமெனத்தனிவீடாக்கிமணிவிளக்காய்ச், சசியோடிரவிதனையேற்றித்தகைசேரண்டமடுக்கடுக்கிப், — பூவின்மகளுங்கலைமகளும்புகலுஞ்சசியுமரம்பையரும், பொருந்தியிழை

க்குமணிச்சிற்றில்புதுச்சோறாக்கியறம்வளர்க்குந்,—தேவியுமையாள்சிலம்பில்வந்தோர்சிறியோஞ்சிற்றில்சிதையேலே, சேணாட்டமரர்சிறைவிடுத்தோர்சிறியோஞ்சிற்றில்சிதையேலே. (௪)

பெருவாரிதியிற்படவரவம்பிறங்குதிருப்பள்ளியிற்கமலப், பீடத்திருந்துவிளையாடும்பெரியபுகழ்சேர்திருமாதோ,—டொருவாதிரவும்பகலுமிருந்தொண்பொற்கமலவிழிகடுயின், றுலகிலுளபல்லுயிர்களுக்குமுண்ணும்படிகளளவாகப், — பரிவாயளந்துகாத்தருளப்படைக்குமயனைமன்மதனைப், பாலரிவர்களெனக்கருதிப்பாரேழையுமுண்டுமிழ்ந்தருளுந், — திருமால்மருகருமதடியார்சிறியோஞ்சிற்றில்சிதையேலே, சேணாட்டமரர்சிறைவிடுத்தோர்சிறியோஞ்சிற்றில்சிதையேலே. (௫)

பருவமுதிர்செங்கரும்பின்முத்தும்பங்கேருகத்தின்விளைமுத்தும், பால்போலெறிக்குநிலாமுத்தும்பசும்பூங்கமுகுதருமுத்து, — மரிசியெனவேகழுவியெடுத்தரித்துப்பணிலநீர்பரப்பி, யடுப்பாயிளநீர்க்காய்கூட்டியமுதப்பசுந்தேனீர்தேக்கி, — விரிசந்தனக்கட்டையைப்பிளந்தேவிறகாயடுக்கிச்செம்மணியை, வீசிப்புகையாதெரிமூட்டிவெண்சோறாக்கியமுதருந்தித், தெருவில்விளையாடும்பேதைச்சிறியோஞ்சிற்றில்சிதையேலே, சேணாட்டமரர்சிறைவிடுத்தோர்சிறியோஞ்சிற்றில்சிதையேலே. (௬)

நிறக்குங்கமலக்கணையிடத்தில்நெடிதாய்வளைத்தவண்டலத்தில், நிரைத்ததரளமலர்ப்பதத்தில்நேர்பட்டிடிலொன்னார்பணிந்து,—மறுக்கொண்டிருக்குமறுவேயிம்மறுவாமெனவெண்ணியநினைவோர்,வார்கோகனகமுலைத்தாயார்வருந்தியழைத்துமடியிருத்தி, — வெறிக்கொண்டிருக்குந்திலதநுதல்வியர்வேதிருபொற்பதப்புழுதி, மிகுதியிதுவேதெனவுரைத்தால்மெய்வாசகமென்விளம்புவிர்காள்,— சிறக்குப்புகழைப்படைத்தோர்கள்சிறியோஞ்சிற்றில்சிதையேலே,சேணாட்டமரர்சிறைவிடுத்தோர்சிறியோஞ்சிற்றில்சிதையேலே. (௭)

நேசமிகுந்தசோழேந்திரனிறைந்தகொலுவில்வரிசைபெற்றோர், நெடியவலிவல்லான்மனைவி நினைவின்படிமங்கலமளித்தோ, — ரோசைமிகுந்தகடலுலகிலொட்டக்கூத்தன்தமிழ்கேட்டோ, ருதவிபுரியென்றடைந்தோருக்குயருங்கருணையருள்புரிவோர், — வீசுங்கரவொன்னலரவுணர்வெற்றிக்கொடியைப்பறித்துவந்து, வேலாயுதர்கண்மனங்களிக்கமிக்கபுகழ்நாட்டும்வல்லோர், — தேசம்புகழக்கீர்த்திபெற்றோர்சிறியோஞ்சிற்றில்சிதையேலே, சேணாட்டமரர்சிறைவிடுத்தோர்சிறியோஞ்சிற்றில்சிதையேலே. (அ)

சிற்றிற்பருவமுற்றியது.

## சிறுதேர்ப்பருவம்.

காரோறுகிரவுஞ்சமலையுருளநினையாதகசடரசுரோசருருளக், கண்டுதுதிசெய்கின்றதண்டமிழ்ப்புலவோர்கள் கலியகன்றோடியுருளத், —தாரோறுகுழல்மாதனைப்புணர்ந்தவர்கள்மேற்றங்குமயலேலகியுருளத், தர்க்கமிடுதுட்டவல்லான்முடியுமுருள்படச்சதகோடிவரையுமுருள, வாரோறுகனகமுலைமாகாளிதன்னுடையவலியுருளமுசுகுந்தனு, மன்னவன்பலமுருளவலைவீசுகூற்றுவன்வஞ்சநெஞ்சகமுருளவே, — சீரோறுகஞ்சமலர்வஞ்சியு

---

சிறுதேர்ப்பருவம் - வீதியிற் சிறிய தேருருட்டி விளையாடும் பருவம்.

இச்சிற்றிற்பருவத்தில் பிரதிகடோறும் கடையில் இரண்டுசெய்யுள் வேறு என்றுகுறிப்பிட்டு ௧-செய்யுளில்-௧-அடியும், ௧-செய்யுளில்-௫-அடியும் காணப்படுகின்றமையால் விடுக்கப்பட்டன.

றைமணிமார்பர்சிறுதேருருட்டியருளே, தேவியுமைபாதச்சிலம்பில்வருவீரியர்கள்சிறுதேருருட்டியருளே. (௧)

* வில்வச்சடாடவிச்சிவனுறையுமாரூரும்வெண்காடுபெஞ்சநதியும், விளைமருவுதண்டலைத்திருவிடைமருதூருமிக்கபுகழ்சேர்தில்லையும், — மல்லைவைத்தமுலைபங்கருறைகின்றசீகாழிமாநகருஞானமேவும், வளமிக்கசெங்கோடுசாய்க்காடுவொற்றியூர்வானளவுமருணகிரியுஞ், — சொல்வைத்தகாளத்திகாசிராமேசுரந்தொழுதிருத்தணிமலையுடன், சோதிதிகழ்கயிலாயகிரியுடன்கச்சியுந்தொகுசத்தபுரியிதுவெலாஞ், — செல்வப்பெருங்காணிகொண்டசெங்குந்தர்கள்சிறுதேருருட்டியருளே, தேவியுமைபாதச்சிலம்பில்வருவீரியர்கள்சிறுதேருருட்டியருளே. (௨)

கொந்தார்மலர்ப்பொன்னினடியிலணிநூபுரங்குமுறுமொலிமிகவுமாடக், குளிருமலர்முன்கையின்முகுதாரியாடக்குதம்பையுங்காதிலாட, — நந்தாவிளக்கெனத்துப்பின்பதக்கமொடுநவரத்தினமார்பிலாட, நலமுலவுநெற்றியிற்சுட்டியாடக்கையினவரத்தினபணிகளாடப், — பந்தாடுமுலைமாதர்தழுவுதிண்புயமிசைப்படர்தீபமாலையாடப், பங்கயமுகத்தினிற்றரளவெயர்வாடப்பசும்பொனரைஞாணுமாடச், — செந்தாமரைப்பொய்கைசூழ்தொண்டைவளநாடர்சிறுதேருருட்டியருளே, தேவியுமைபாதச்சிலம்பில்வருவீரியர்கள்சிறுதேருருட்டியருளே. (௩)

பைம்பொன்னுவிலையுதரவெண்டரளநகைமாதர்பனிமலர்க்கூந்தலிருளைப், படர்முகிலினங்கவரவந்துதண்டலைதொறும்படியும்வானுதலினழகை, —நம்பிவானினினிலவுபின்சென்று

---

* இதனை "விடங்கமேழாதிவீதிவிடங்கமாரூர்வெண்காடு நடங்கொளுந்தில்லைமூதூர்பஞ்சநன்னதிசாய்க்காடு-மிடங்கொள்மாகாளமேழுமிடைமருதூர்செங்காடு- அடங்கியதருமவாட்சிச்செங்குந்தர்தொகுதிவாழி" என்றார் அருட்கவியும்.

கவரவேநறியமேடையிலூரவு, நாகரிகமயிலினஞ்சாயல்கண்டி
வர்கள்பின்னூடிநாடித்திரிதர, — வம்புயஞ்சூழ்புனல்குடைந்
தாடிமீளிலவ ராளுநடை கண்டுபழக, வன்னங்களொருகோடி
சேவலொடுபின்செல்லவரியபல்வளமேவிடுஞ்,— செம்பொன்
னாலயமேவுகச்சியம்பதியதிபர் சிறுதேருருட்டியருளே, தேவியு
மைபாதச்சிலம்பில்வருவீரியர்கள்சிறுதேருருட்டியருளே. (௪)

மேவிவளர்பூகத்தின்முத்தத்தையுங்கன்னல்விளைகின்றமு
த்தத்தையும், விரியும்புனற்சங்குமுத்தத்தையுங்கழனிவிளைநெல்
லின்முத்தத்தையுந், — தாவியெழுகின்றவேய்முத்தத்தையுங்க
லைத்தண்ணிலாமுத்தத்தையுந், தாமரைப்பூவில்வளர்முத்தத்தை
யுங்கார்கடந்தமணிமுத்தத்தையும்,—பூவையர்கள்கந்தரமுத்தத்
தையுங்கரிப்பொற்கொம்பின்முத்தத்தையும், புகழ்கின்றவயல்
மாதர்மதுவுக்களக்கின்றபுதுமைசேர்கச்சிநகரில்,— தேவர்தொ
ழு * கருமாறிபாய்கின்றதிறல்வீரர்சிறுதேருருட்டியருளே, தே
வியுமைபாதச்சிலம்பில்வருவீரியர்கள்சிறுதேருருட்டியருளே.()

அசைதருஞ்செண்பகவனங்கோடிவேலியாயதனடுவில்வி
ளைகழனியி, லடர்சமுகுவனமெலாமுத்தங்கள்சொரியவேயதன
டுவிலொருகோடிநீள், — பசியமடலேந்தியொருபொன்னுருவ

---

* சருமாறிப்பாய்ச்சல் - காஞ்சிபுரத்தில் ஸ்ரீகாமாக்ஷியம்மணியார் ஆலயத்திலுள்ள பிலத்தில் புகுந்தேறுதல். இதனை "கருமாறிப்பாச்சலார்க்குமினிது" என்றார்காளமேகப்புலவரும். இச்சரிதையின்விரிவை ஸ்ரீகாமகோடி புராணத்தாலறிக.

இப்பருவத்தில் ௯-௭-எண்ணுள்ள இரண்டு செய்யுட்களையும் பலபிரதிகள்கொண்டு பரிசோதிக்கவேண்டியிருப்பதால் விடப்பட்டன. பிரதிகளுள்ளார் அனுப்பில் வந்தனத்துடன் எற்று மூன்றாமுறை சேர்த்து பதிப்பிக்கலாம்.

மாகியப்பண்பாலையிளநீர்தரும், பரிவுடையதென்னவனமெதிர்நின்றுதொழுகின்றபான்மையுமதன்றிமற்று, —மொசியுமிடைமாதொடுகொடிபோலமேடைமேலுலவிநகைநிலவொளியினாலும் பனைமயக்கிடும்புதுமையும்புதுமையாயுள்ளத்திலறியுமமரர், —திசைதொறும்பூமாரிபொழிகச்சிநகராதிபர் சிறுதேருருட்டியருளே, தேவியுமைபாதச்சிலம்பில்வருவீரியர்கள்சிறுதேருருட்டியருளே. (௮)

அவ்வானவிந்திரனொடுமுப்பத்துமுக்கோடி வமரருந்தொழுதிறைஞ்ச, மழகியதிருப்பரங்குன்றுசீரலைவாய்பொன்னாவினன்குடியேரகம், — வெவ்வாதையணுகாதபலமலைகள்மதயானைமேவுதென்சோலைமலையு, மேதினியிலாறுதலமகலாதுகுடிகொண்டுமெய்யடியவரைப்புரக்கத், — தவ்வாதுமயிலேறிவிண்ணோர்கள்சூழவேதாட்சிலம்பொலிமுழக்கத், தகுதிதிகுதிகுதியெனநடனமுடனேவந்துதயவுபுரிகருணைமேவச், — செவ்வேள்திருத்தம்பிமார்கச்சிநகராதிபர்சிறுதேருருட்டியருளே, தேவியுமைபாதச்சிலம்பில்வருவீரியர்கள்சிறுதேருருட்டியருளே. (௯)

கொங்குலாவியசோலைமேவியவயோத்தியிற்கொண்டதசரதனெனுமகா, கொற்றவன்சேயெனத்தோன்றிவிசுவாமித்திரர்கூடவேகித்தாடகை, — துங்கமாகச்சயங்கொண்டுமிதிலாபுரித்துனைசனகன்மகளைவேட்டுந், தோலாதிருக்குமயோத்தியில்வந்தபின்தொல்லைவனவாசமெய்திப், — பங்கமிலிராவணன்றலைகளீரைந்தையும்பறிகொடுத்தோடவென்று, பரிவுகொடுவீடணர்பட்டமுங்கட்டிப்பரித்தராமாவதாரச், — செங்கண்மால்மருகனானவந்தசெங்குந்தர்கள்சிறுதேருருட்டியருளே, தேவியுமைபாதச்சிலம்பில்வருவீரியர்கள்சிறுதேருருட்டியருளே. (௧௦)

சிறுதேர்ப்பருவமுற்றியது.

## அரங்கேற்றியகாலமுதலியன.

அருள்பெறுசகாத்தமதொராயிரத்தறுநூற்றொடைம்பஃது மேழுக்குமே, லச்சுதனன்னுளினிற்கதிர்வாரமதுதன்னிலதிசயக்கச்சியதிபர்,—பெருமைபெறுமாயிரத்தொள்ளாயிரத்தவர்பிரபந்தத்தமிழ்க்கேட்டிடும், பேசரியவல்லானைவென்றசெங்குந்தர் தம்பெருமையாங் [illegible] ளினமணியோர்,—தருமதுணையானபேர் [illegible] டகமுள்ளபேர்தருவைநிகரானபெரியோர், தந்த்பொன்னுடைகரிபரிவாகனத்தோடுதங்கப்பதக்கமுதலா, — வருபொருளிராசியாய்வளையாமலீந்தபேர்வளர்பஞ்சவண்ணவிருதோர், வளமையானவவீரவுயர்சிங்கமானபேர்வனபுலிக்கொடிவாழியே.

---

## வாழி.

மாதவமுடையதேவிமலரடிச்சிலம்புதித்த
தீதிலாவீரவாகுமுதலியதீரர்தந்த
பூதரமென்னவோங்குபுயமுடைக்குந்தர்வாழ்க
நீதிசேர்புகழினோங்குநெடுந்தொண்டைநாடும்வாழ்க.

செங்குந்தர்பிள்ளைத்தமிழ்முடிந்தது.

---

சேந்தந்தப்படையோன்றிருவடிவாழ்க.

வேலுமயிலுந்துணை.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# சாத்துகவிகள்.

சென்னைக்கவர்ன்மெண்டு நார்மல்கல்விச்சாலையில்
தமிழ்த்தலைமைப்புலமைநடாத்திய

## கோ-இராசகோபாலபிள்ளையவர்களியற்றியது

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

மருமையிலைக்குழலியர்கண்போல்வாளுங்கண்
மருமையிலையுகளுமலர்த்தடங்கண்மல்கு
திருமையிலைநகருடையான்கமலமேவு
திருமையிலைவாகளித்ததியாகராய
னிருமையிலைதாம்பயனைப்பெறுவான்றந்த
விலட்சுமணப்பெருமான்செங்குந்தருச
லருமையிலையிதனினாங்கென்னவச்சி
லாற்றினான்புலவரவையேற்றினானே.

காஞ்சிபுரம் வித்வான்

## இராமசாமிநாயகரவர்களியற்றியது.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

தேசலகற்றிடநிறைதண் டரளவயற்றிருமயிலைத்தியாகராயன், பேசலகற்றிடமுயன்றுவப்பயனாலிலச்சுமணப்பெயரின்வந்தோன், கூசலகத்துள்ளாதார்கொண்டுகரந் துறையவளர்குலச்செங்குந்த, ருசலகத்தூசலெலா மூசலுறப்பதித்திகந்தானுவமைமன்னே.

வைசியகுலதிலகராகிய

## திரு - காமுசெட்டியாரவர்களியற்றியது.

நிலைமண்டில வாசிரியப்பா.

பரிதிமதிதீயிருவிழியாவுடை
யுரிதிவடனதாளொருவாப்புலத்தவ
ருளத்திருடபவவிர்களங்கமொண்கந்தரச்
சுந்தரவரனை துன்வலமார்ந்த
கருநிறவண்ணமிருவுந்திபூத்த
முளரித்தவிசின்விளைஇவேத
னிருமாணஞ்செய்யொருமாணஞ்சால்
கார்கலித்திரைமோதார்கலியுடுத்த
வட்டநேரவனியட்டதிக்கும்புகழ்
கிட்டியவொண்கவியொட்டக்கூத்தனுந்
தீதணுமாண்பன்கோதறத்தோன்றுபு
பாயிருட்சீக்கும்பானுவோடலவனைத்
தங்குந்தமரபீண்டெங்குந்துளக்காத்
தகையவொன்றிகல்புரிந்திகமீட்டியெழுபான்
மைதீர்பநுவறெய்வீகத்துறைத்
தோங்கிடவிளக்கமாயுறுஉம்பண்பமர்
செங்குந்தர்தம்மேற்றங்குந்தரமே
லூசல்வாழ்த்துயர்லாலிகட்டிய
மாசின்மங்களமன்னேற்கடுத்து
வருதோன்றலெனவுளாசெயத்தன்குலம்
பழுதின்றியாய்வித்தெழுகாவெழுத்தி
னியைஇவித்திசையுய்த்தனன்றிசைதொறுந்
தயைபெறுதியாகராயச்செம்ம
றந்தசற்குணஞ்சாரிலக்குமணச்
சாமிசெங்குந்தத்தோமிலானே.

உ

சிவமயம்.

முருகக்கடவுடுணை.

# செங்குந்தரூசல்.

## விநாயகர்காப்பு.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நீருலவுஞ்சடைப்பரமனுபயபாத
நெஞ்சின்மறவாத்துதிசெய்நேயரான
பேருலவுஞ்செங்குந்தர்தங்கண்மீது
பிரபலமுடனூசற்பாட்டுரைக்கவேண்டிக்
காருலவுமணிமதில்சூழ்மயிலைவாசன்
கபாலீசரருள்கயமாமுகத்துநாதன்
சீருலவக்கூத்தாடும்விநாயகன்றாள்
சிந்தைதனிற்குடியிருத்திச்செப்புவோமே.

திருவிளங்குநவவீரர்குலத்தில்வாழுஞ்
செல்வர்சொன்னநாவிலங்காவியல்பையுள்ளோர்
மருவிளங்குஞ்செங்கடப்பமாலைபூண்ட
மன்னவர்கள்சிவனீதிமறவாமைந்தர்
தருவிளங்குந்தேவர்புவிதழைக்கவாழ்வு
தருவோர்களூசலெனுந்தமிழைப்பாடச்
செருவிளங்குமானைமுகவிநாயகன்றாள்
சென்னியில்வைத்தநுதினமுஞ்சிந்தைசேர்ப்பாம்

பொன்னுலவுவாசவன்மால்பிரமன்விண்ணோர்
போரசுரர்வாதைவெள்ளிப்பொருப்பிலீசன்
றன்னுடனேயுரைக்கநுதல்விழியில்வீசுந்
தழற்பொறியிலறுமுகவன்றனைவாவென்று
பன்னுமசுரேசர்குழாநாசமாகப்
படைசிதறத்தேவர்கடம்பயங்கடீர
மின்னுதனிவேல்கொடுபோய்வெல்வாயென்ன
வென்றகுகன்பின்னவரோயாடிரூசல் (க)

வச்ரமணியாற்கடைந்தகால்கணட்டி
வைடூரியத்திலுயர்விட்டம்போட்டு
பச்சைநிறமரகதத்தாற்கொடுங்கைசேர்த்துப்
பருநீலமணிப்பலகைத்தொட்டில்பூட்டி
நிச்சயச்செம்பொன்னின்வடக்கயிறுதூக்கி
நிலையாகச்சோடித்தவூசன்மீதே
கச்சிமாவடிக்கம்பர்பங்கில்வாழுங்
கௌரியுமைபுத்திரரோயாடிரூசல். (உ)

சந்திரகாந்தியினொளிசேர்பட்டினுலுந்
தபனனொளிப்பட்டாலுமழகுசேர
வந்தமிகுசவரிகள்சல்லிகளுந்தூக்கி
யலங்காரக்கண்ணாடியொளிகள்வீசச்
சுந்தரமாகியசெம்பொற்குடங்கண்மின்ன
தூய்மணிமாணிக்கவிளக்கெங்குமன்ன
விந்தடைவாயலங்கரித்தவூசன்மீதே
யின்முருகன்றுணைவர்களேயாடிரூசல். (ந)

தருசின்னடோல்துடிக்கமேளமோதத்
தவண்டையொலிகறங்கமிகுவேணுநாதம்
வருசின்னமெக்காளைருத்திரவீணை
மகிழ்சுரமண்டலநாதவொலிகளார்ப்ப
வொருவருக்குமுலகிலிந்தப்பெருமைவாரா
துளைக்கிலெனச்சகலவாத்தியமுழங்க
குருபரன்றாளிணைமலரைப்போற்றிநாளுங்
குடிபெறுஞ்செங்குந்தர்களேயாடிரூசல். (௪)

சந்தனக்குங்குமம்புனுகுகளபம்பன்னீர்
சவ்வாதுகூட்டிவட்டிறன்னின்மொண்டு
கந்தமிகுதோகையர்கணிறைந்துபூசக்
கனசுகந்தக்கார்குழலார்வசந்தமாட
யிந்துநுதன்மடவார்கள்பூப்பந்தால்விட்
டெறிந்துகையான்மருக்கொழுந்துமலரும்வாரிச்
சிந்துமழைபோற்பொழியக்களித்தவீரச்
செங்குந்தமன்னவரேயாடிரூசல். (௫)

பெண்கள்பொன்னினாலத்திசெங்கையேந்திப்
பிரபலமுடன்சோபனமங்களமுங்கூறப்
பண்புடனேதியாகவசந்தங்கண்மீதிற்
பாவியிளங்கன்னியர்கள்வடந்தொட்டாட்ட
யெண்சுருதியிராகமுமெண்டிசையுமோங்க
வெழிற்றாளமிகுதிசைகளெங்குமார்ப்ப
கொன்றைமுடிச்சடைப்பரமன்றாள்வணங்குங்
கொற்றகவீரர்களேயாடிரூசல். (௬)

மாதவருமறையோருமாசிகூற
வண்டமிழோர்செந்தமிழான்மகிழ்ந்துவாழ்த்த
வோதுபட்டுவரொருபாற்புகழ்ந்துபோற்ற
வுகந்துகட்டியக்காரரொச்சரிக்க
வாதிபஞ்சவாத்தியத்தின்றொனிகளெங்கு
மதிர்ந்துபெருங்கடலொலிபோல்முழங்கியார்ப்பச்
சீதமதிச்சடைப்பரமன்சிறுவரான
செங்குந்தமன்னவரேயாடிரூசல், (எ)

பழுதின்மொழித்தமிழொட்டக்கூத்தன்முன்னாள்
பகர்வளவன்சமுகத்திற்பரிவாயீட்டி
யெழுபதுபாட்டொக்கமனமொருகையாக
விசைசிரச்சிங்காதனத்தையிட்டுநாளும்
வழுவிறமிழுனைகேட்டுப்பெருமைகொண்ட
வண்மையுள்ளநவவீரமன்னரான
வுமைமழுப்பாணியரடியைத்துதித்தேஞான
முயர்செங்குந்தாதிபரேயாடிரூசல். (அ)

அஞ்செழுத்துமந்திரத்தையுன்னுதாரை
யரியமுத்திதரும்வெண்ணீறணியாதாரைத்
தஞ்சமெனச்சிவனடியைப்பணிசெய்யாரைத்
தருக்குடனேசிவாலயத்தைவலம்வராரை
வஞ்சனைபொய்யுரைநெஞ்சின்மறவாதாரை
வளர்சடையோன்றுண்மனதில்வையாதாரை
வெஞ்சமறச்சிரந்துணித்துமகிழ்ந்துவாழும்
வீரசெங்குந்தாதிபரேயாடிரூசல். (கூ)

அரிவையர்கள்பரதநடனங்களாட
வணிகொள்புவியோர்களெல்லாமகிழ்ந்துபார்க்கப்
பரிவுடனேகவரியிருபாலும்வீசப்
பகைவரெலாம்வணங்கிநலம்பாரித்தார்ப்ப
வரிசைமலர்ச்செங்கடப்பமாலைபூண்ட
வையமெலாமிகமணக்கும்வளமையுள்ள
குருகருணைதழைத்தவரோயுயர்ந்தகோழிக்
கொடிவிருதுபடைத்தவரோயாடிரூசல் (க0)

பட்டாடையசைந்தாடமார்பிலிட்ட
பதக்கம்பொற்சரப்பணிமுத்தாரமாட
விட்டரத்தினக்கடுக்கன்காதிலாட
வெழில்வீசுஞ்செங்கடப்பமாலையாடச்
சுட்டிகண்டசாமணப்பூமாலையாடத்
தொடுத்தநிறைபூடணத்தினிழல்களாட
மட்டவிழ்மாமலர்நிறைந்தவூசன்மீதே
வல்லானைவென்றவரோயாடிரூசல். (கக)

வாசமலர்முடித்தளகபாரம்பூண்ட
வனிதையர்கடிருத்தியநல்விரல்கடம்மிற்
றேசுறுபொற்பவித்திரமுமப்பொன்னூலே
திகழுநுதற்பட்டமுஞ்சுட்டிகளுந்துன்ன
காசுமுத்துநவரத்நக்கடுக்கன்சோடு
காதிலணிந்தவ்வவற்றினொளிகண்மின்ன
வாசவன்விண்ணோர்கள்சிறைமீட்டிந்திராணி
மங்கிலியந்தந்தவரோயாடிரூசல். (கஉ)

காவிலங்காமைந்தர்பட்டமானங்காத்த
நவவீரநாயகரேயாடிரூசல்
பாவிசைக்கும்புலவோர்கண்மிடிகடீரப்
பரிசளிக்கும்பார்த்திபரோயாடிரூசல்
தாவுமயின்மீதேறுஞ்சுப்பிரமண்ணியச்
சாமிதுணையானவரோயாடிரூசல்
கூவிமுப்போதினையுகிதமழைக்குங்கோழிக்
கொடிவிருதுபடைத்தவரேயாடிரூசல். (கங)

காலன்முறிபடவெழுதியோலைவிட்ட
காளைநவவீரர்களேயாடிரூசல்
சூலமழுமான்கொளரன்மைந்தரென்ற
சொல்லுயர்ந்தநாயகரோ யாடிரூசல்
சீலமுடனஞ்செழுத்தைத்துதித்தெந்நாளுஞ்
சிவபூசைதுரந்தரரோயாடிரூச
லாலகண்டனும்பரனம்பிகையைப்போல
வவரவர்தம்மனைவியரோடாடிரூசல். (கச)

கயிலையொடுமேருவினைச்சூழவேமெய்க்
காவல்கொண்டகாவலரோயாடிரூசல்
பயனறிந்தேயடைக்கலமென்றடைந்தபேரைப்
பரிவுடனாதரிப்பவரோயாடிரூசல்
தயவுதரும்பதவியிலெந்நாளும்வாழுஞ்
சற்குணமுண்டானவரோயாடிரூச
லயனெடுமாமகளரியோடாக்கம்போல
வவரவர்கண்மனைவியரோடாடிரூசல் (கரு)

செங்குந்தரூசல்முற்றியது.

## வாழ்த்து.

திருமாலுந்திருவும்போல்வாழிவாழி
சித்தசனும்ரதியும்போல்வாழிவாழி
புருகுதனுஞ்சசியும்போல்வாழிவாழி
பூவுலகிலனைவோரும்வாழிவாழி
மருவுறுநற்செங்கடப்பமாலைபூண்ட
மன்னரொனுஞ்செங்குந்தர்வாழிவாழி
யருமறையுஞ்செங்கோலும்வாழிவாழி
யவரவர்கண்மனைவியுடன்வாழிவாழி.

## லாலி.

இலாலியயனுலகநாட்டியதைப்புரக்க
நாரணனைக்கூட்டியரனல்வினைகள்வீட்டி
சீலமொடுநின்றருள்செய்சிற்பரைநின்பாதச்
சிலம்பில்வருமைந்தர்குலஞ்சிறக்கவருள்வாயேஇலாலி
இலாலிமயிடாசுரன்செயுநலிவையகற்றி
நானிலத்தைக்காத்தநின்னளினபதச்சிலம்பில்
கோலமொடும்வந்தநவவீரரொனுமன்னர்
குலம்விளங்கவேயருள்கூர்தல்செயுமம்மா - இலாலி

## பெரியகட்டியம்.

அருளோங்குகயிலையங்கிரியிலானருள்குகற்
கநுசர்கையேந்துகுந்தம்
அம்பிகையகங்களித்துலகுய்யவவர்கரத்
தங்கைகொடுதந்தகுந்தம்
அண்ணரியவெள்ளிவரைபொன்வரையிடைக்குரவ
ரருள்காவலேற்றகுந்தம்

அமரர்துயர்கெடவவுணவேட்டஞ்செயக்கருதி
யறுமுகனொடேகுகுந்தம்
அந்தமிகுகந்தமாதனமெனும்வரைமீதி
லாண்மைகொடுநின்றகுந்தம்
அலையெனுங்கரம்வீசியொலிகொண்டெழும்பெரிய
வாழ்கடல்தாவுகுந்தம்
அடலவுணசேனைகட்கதிபர்வாழ்லங்கைகட
லாழமேலோங்குகுந்தம்
அணிமிகுமயேந்திரபுரியண்மிசிறையிடைபடுஉவ
மமரரைத்தேற்றுகுந்தம்
இருளோங்கும்வள்மனச்சூரனவையேறிமே
லிழியாதனங்கொள்குந்தம்
இகலவனுளந்தெரிந்தோங்கியமரேற்றவனை
யீர்த்தழித்திட்டகுந்தம்
இன்னுமைபுரியிராக்கதர்சூழுகரினை
யிடித்துதுகளாக்குகுந்தம்
இளையசுதன்வச்சிரவாகுவைவதைத்தவன்முது
கென்பினின்றுடுகுந்தம்
இரணியனைவெங்கண்டொரொரிமுகன்மூவாயிரவ
ரின்னுயிரைவீட்டுகுந்தம்
இடியேறெனத்தருமகோபனுதியவமைச்
செண்ணிலரைவாட்டுகுந்தம்
இரவிபகைவனைமாய்த்துசிங்கமுகனைச்செகுத்
திணையிலாதோங்குகுந்தம்

இனியமர்களிலேயெனுச்சூரன்புலிக்கொடியை
யெய்திப்பறித்தகுந்தம்
பொருளோங்குதண்டமிழ்ப்புகழோங்கமநுகுலம்
போந்துலகையாண்டகுந்தம்
பொன்னுலகர்பரவுமுசுமுகமன்றனுதுபெயர்
போற்றவுறவேற்றகுந்தம்
பொங்கியமனுக்கோலைபோக்கியவன்மனைவவ்வு
பொற்கிள்ளைபெற்றகுந்தம்
பொருவில்சந்தானமாங்கனியினுக்காக்குடம்
புக்கிவிறல்கொண்டகுந்தம்
பொதுநீக்கியாடுமாகாளிகைத்தாளம்
பொருக்கெனக்களைசெய்குந்தம்
பொற்பாரும்வேதகிரியுற்றசம்பாதிவினை
போக்கியமுதீந்தகுந்தம்
பொய்த்தாலயம்பெருவயனையொருமுனிவன்
பொருட்டான்முனிந்தகுந்தம்
பொடிதலில்வலிகொள்வல்லானைவென்றவன்மனைவி
போற்றவுயிர்தந்தகுந்தம்
தெருளோங்குதில்லைமாகாளிகிலைகொண்டாழ்ந்த
தேரோடவிட்டகுந்தம்
தெரிவருந்தேயமெண்ணிலவென்றுதிரைதரத்
தேய்த்திடாதாண்டகுந்தம்
தெளிகொளாருயிரொலாஞ்சிந்தித்தவெய்தபல்
சிவாலயமமைத்தகுந்தம்

தெற்றியினுமில்லினுந்தன்னைவழிபடுவோர்க்கெண்
சித்திதந்தாள்செய்குந்தம்
தெய்வமறையோதுபஞ்சாக்கரஞ்செவியாத
தீயர்வாய்சீய்ச்செய்குந்தம்
தெண்மைதருவெண்ணீறுருடக்கமணிபுனைகலாச்
சிதடர்மெய்சிதைசெய்குந்தம்
தெறிதராச்சிந்தையொடுதனையருச்சிப்பவரை
சிவபதத்தேற்றுகுந்தம்
தெண்டிரைக்கடல்சூழுமுலகில்கைக்கோளர்தஞ்
செயவீரசெங்குந்தமே.

## சின்னகட்டியம்.

வஞ்சகமதாகவீருணமெனுமேரியிடை
வகைபெறத்தூண்கணிறுவி
மண்டபங்கட்டிமற்றதிலிருந்தெண்டிக்கின்
மன்னரைவதைத்தவல்லான்
செஞ்சிலைத்திறமும்வாள்தீமையுங்கண்டமால்
தீவினைகள்வந்தவெனவே
சிந்தைகொடவன்றனைச்சிதைசெய்வகையாய்ந்தினித்
தினையளவுபோர்துமுவனை
விஞ்சவிடலாகாதெனச்செவ்வேடுணைவந்தம்
விழுக்குலத்தவர்களல்லால்
வேறொருவராலணுவுமாகாதெனத்தேறி
விண்ணவர்வியப்பவிலகும்
பஞ்சவனமேயவிருதுக்கொடிமுனஞ்சீர்
படைத்தசெங்குந்தர்கடமிற்

பன்னிருவர்கையிலேவெற்றிலைப்பாக்கினைப்
பரிவாகவேயளிக்க
கொஞ்சிக்கைகொட்டிக்குதித்தோடிவழியினோர்
குமரியீருவர்க்கிருவருங்
கூவுபரியாப்பினுக்கொருவனுமுயிர்தந்து
குறைசெய்நாய்புலிகரடிகண்
மிஞ்சிடாவண்ணநால்வர்கடுணிந்தழன்மீது
மீறியொருவன்படுக்க
மேலேறியகழ்முதலைவாய்க்கொருவனும்வயிர
மேயகாற்கொருவனுமுயி
ரஞ்சாமறந்துபின்வல்லானிடத்திருவ
ரணுகிபொற்றலையாணைகோ
லணிமாயவிரதநால்வகைசாலபரிசேனை
யாதியையவன்றரக்கொண்
டெஞ்சாதவன்மனைவிவேண்டமீண்டபயற்கு
மெழிறில்லையரனடிக்கு
மிணையில்தஞ்சிரமளித்துலகர்தொழபதின்மரொடு
மீறில்பதமடைசீலரோ.

## மங்களம்.

செயமங்களம் நித்திய சுபமங்களம்.
அறைகாவல்மெய்க்காவ லமைந்தநவவீரர்க்கும்
அறுமுகவன்றுணைவரொனு மரசர்கடமக்கும்
நறுமலர்ச்செங்கடப்ப மாலையணிமார்பர்க்கும்
நாவிலங்காதருள்செய் நாயகருக்கும்
செயமங்களம் நித்திய சுபமங்களம்.

ஆதிசத்திபாதச்சி லம்பிலவதரித்தவர்க்கும்
அமரர்சிறைதனைத்தீர்த்த வருளாளருக்கும்
சூதுசெயுமசுரர்களைச் செயித்துங்செயங்கொண்டவர்க்கும்
செங்குந்தச்சிவநீதி தெளிவளவருக்கும்

செயமங்களம்நித்தியசுபமங்களம்.

கயிலாயமலைக்காவல் காக்குமுயர்நாயகர்க்கும்
கருதரியகோழிக்கொடிக் கதிபருக்கும்
பயனுதவுஞ்சிவசமய பத்திபரிபாலகர்க்கும்
பட்சமாய்நகர்காத்த பண்புள்ளவருக்கும்

செயமங்களம்நித்தியசுபமங்களம்.

---

செங்குந்தப்படையோன்றிருவடிவாழ்க.

வேலுமயிலுந்துணை.

## அறிவிப்பு.

இந்நூற்பெறவேண்டுவோர் எனதிடத்திலும், சென்னை தங்கசாலைவீதியில் 415 வது எண்ணுள்ள கிருகத்தில் ஸ்தாபித்துள்ள இந்துதியலாஜிக்கல்யந்திரத்திலும் தபாற்கூலியுடன் விலை அணா இரண்டரை அனுப்பிப்பெற்றுக் கொள்ளலாம்.

இங்ஙனம்,

அ. இரத்தினசபாபதிமுதலியார்,

நெ. 1. குமரப்பமுதலிவீதி

சென்னை